# பெண்

தொகுதி : 27



"தூக்கியெறியப்பட முடியாத கேள்வியாய்
உங்கள் முன் பிரசன்னமாயுள்ளேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

தொகுதி : 27

2022

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்

சூரியா பெண்கள் அபிவிருத்தி
நிலையத்தின் சஞ்சிகை

இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.

T.P No : 065 - 2223297
Fax No : 065 - 2224657
E-mail : suriyaw@slt.lk
suriyawomen1991@gmail.com

**The Woman**
A journal Published by
**Suriya Women's Development Centre.**

ஆசிரியை :
**விஜயலட்சுமி சேகர்**

முன் அட்டை :
மாற்றுத்திறனாளி பெண்களின் உரிமைசார்
பிரகடனம்

பின் அட்டை :
"அனிச்சம்" குழு நண்பர்கள்

அச்சகம் :
**எவகிறீன் அச்சகம் (பிறைவேட்) லிமிட்டட்,
மட்டக்களப்பு - 065 2222607**

விலை : 100.00




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாசகர்களுடன் . . .

மற்றுமொரு பெண் சஞ்சிகைக்கூடாக வாசகரகள் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பெண்களுடன் பணியாற்றி வரும் நாம் அவர்கள் பதையூடாகப் பயணிப்பது முக்கியமானதாகும். பெண்கள் பயணம் பல சவால்களை முகம் கொடுத்துக் கொண்டே தன்னையும் தன்னைச் சார்ந்த சமூகத்தையும் இணைத்து அடுத்த கட்ட நகர்வை நோக்கிச் சென்று கொண்டிருக்கும். இந் நகர்வில் அவர்கள் காலத்திற்குக் காலம் புதுப் புது விடையங்களை கடந்து கொண்டிருப்பர். அத் தருணங்களில் கடக்கும் விடயங்களை பதிந்து ஆவணப்படுத்தி வைத்திருக்க வேண்டிய தேவை உள்ளது. ஏனெனில் எம்மை விழுந்து விடாது தூக்கி நிறுத்தும் சிறந்த ஆசான் எமது கடந்த கால அனுபவங்கள் ஆகும். ஆகவே எமது சஞ்சிகையானது காலங்களின் ஆவணப்படுத்தலாகவும் தொழிற்படுகிறது.

இன்றைய கால கட்டத்தை நோக்கில் சில விடையங்கள் முக்கிய பேசு பொருளாய் உள்ளன. அதில் ஒன்று எமது பொருளாதார நெருக்கடி. அதைத் தீர்ப்பதற்கு மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களும், தமக்கான நியாயத்தைப் பெற்றுக் கொள்ள முன் வைக்கும் அவர்களது கோரிக்கைகளும் முன்னெடுப்புக்களும் ஆகும்.

தற்போது அனைவரதும் தினசரி வாழ்வின் போக்கு இந்த பொருளாதாரச் சுமையுடன் பின்னிப் பிணைந்து விட்டது. உதாரணமாக எனது நண்பி ஒருவர் தனது கையடக்கத் தொலைபேசியில், பல குட்டிகளை ஈன்ற ஒரு தாய் நாய், தனது குட்டிகளுக்கு பால் கொடுத்துக் கொண்டிருப்பதை புகைப்படம் எடுத்துள்ளார் (பக்கம் 33) அவர் என்னிடம் சொன்னது.. 'பாவம் இந்தத் தாய் நாய், எப்படியோ இத்தனை குட்டிகளுக்கும் பால் கொடுத்துத்தான் ஆகனும். ஆனா இந்தத் தாய் நாய்க்கு ஒரு பிளேட் சோறு யார் கொடுப்பார்கள்' இதைவிட எம்மை அச்சுறுத்தும் பொருளாதா வறுமையின் கொடுமையை எப்படி விபரிப்பது..?

இந் நிலைமைக்கான காரணங்கள் என்ன? நாங்கள் ஏதாவது செய்கிறோமா? எமக்கான கேள்விகளை பொது வெளியில் முன்வைக்கின்றோமா? அதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்க முடிகிறதா? இத் தருணங்களில் படைப்பாளிகள் என்ன செய்யலாம்? இது போன்ற பிரச்சனைகளை வேறு நாடுகள் எதிர் கொண்டனவா? அப்படியாயின் அவர்கள் அதனை எவ்வாறு எதிர் கொண்டனர்..? இதன் எதிர் விளைவுகள் என்னவாக இருக்கும்..?

எமக்குள் உருவாகும் இவ்வாறான கேள்விகளுக்கான தேடல்களுக்கு இவ் இதழ் முக்கியத்துவம் கொடுக்கின்றது.

அடுத்த விடயமாக இச் சஞ்சிகை பேசுவது, திரை மறைவில் காயப்போட்ட துணிகளாய் எமக்குள் வாழும் 'க்யர்'(Queer) நண்பர்களது குரல்களையும், மாற்றுத்திறனாளிகள் குரல்களையும் ஆகும். உதாரணமாக ஒரு சம்பவம், ஒரு நாள் வீட்டு வேலைக்குச் செல்லும் ஒரு சகோதரி என்னிடம் 'உண்மையாகவா அக்கா, சூரியா ஆக்கள் இப்ப ஆம்பிளய பொம்பிளையா மாத்துறாங்களாம்.....' 'நான் வேல செய்யிற வீட்டுக்கார பொம்புள சொன்னாக்க' 'நீயும் கவனம் பவளம்' என்று அவ என்னட்ட சொல்றாக்கா" மாயாஜாலம் செய்யும் மந்திரக்காரியைப் பார்ப்பது போல் மிகுந்த ஆச்சரியத்துடன் என்னிடம் அப் பெண் கேட்டது இது.

இந்தக் குரலானது, நமது 'க்யர்' நண்பர்கள் வாழும் சமூகத்திற்குள் இருந்துதான் வந்தது. இன்று ஒடுக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள் போல் ஒடுக்கப்பட்டவர்களாக இவர்களையும்' நாம் காண்கிறோம். தற்போது அவர்கள் குரல்கள் வெளிவரத் தொடங்கியுள்ள இக் காலப்பகுதியில் அவர்களுக்கெதிரான புரிதல்கள் அற்ற இவ்வாறான குரல்கள் மேலும் அவர்ளை எழும்ப முடியாத நிலைக்குக் கொண்டு செல்லும். ஆகவே எமது சஞ்சிகை இவ்வாறு ஒடுக்கப்படும் சமூகத்தில் வாழும் நண்பர்களது உணர்வுகளை, உண்மைகளை, உரிமைகளை, ஆழமான தெளிவு படுத்தல்களை இங்கு முன்வைக்கின்றது. தொடர்ந்து முன்வைக்கும்.

**- ஆசிரியை -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே . . .


↔ அமைதியை மீட்டெடுப்போம்

↔ ஐயோ கடவுளே! இன்னும் ஏன் . . .

↔ அன்பாலே நடை நடையாய் . . .

↔ சேவை! தொழில்!

↔ பழுத்த நாவல் . . .

↔ நியாயக் கிராமமும் . . .

↔ போராட்டக் காலங்களில் . . .

↔ பெண்ணிலைவாதம் என்பது . . .

↔ உயர்ச்சியாகுமே பெரு மகிழ்ச்சியாகுமே . . .

↔ நன்னிலம் . . .

↔ ஏன்!

↔ உணவே மருந்து

↔ எழுத்தாணி

↔ மழைக்கு குடை தடை!

↔ அனிச்சம்

↔ சொற்களஞ்சியம்

↔ கடினங்களை கடத்தல்

↔ இலங்கையின் மாற்று திறனாளிகளின் . . .

↔ கூத்தாடி . . . கூத்தாடி . . .

↔ பாதி வேகாத பாதி ரொட்டி

↔ நீலநிறக்காரர்

↔ கடிதம்

↔ காற்றுப்போன பலூன்கள்

↔ முன்னிலை . . .




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அமைதியை மீட்டெடுப்போம்:
# போராட்டம் தொடர இதுவே ஒரே வழி

நாரைகள் சென்றுவிட்டன. அவர்கள் திரும்புவார்கள். மக்கள் போராட்டத்திலிருந்து அமைதி பறிக்கப்பட்டுள்ளது. அதுவும் திரும்புமா?

கடந்த ஒரு கிழமையாக எங்கள் வீட்டின் முன் உள்ள மட்டக்களப்பு வாவியில் கம்பீரமான நாரைகள் இருந்தன. அவைகளை கண்டு நாங்கள் மிகவும் பூரிப்படைந்தோம். அவைகளைப் பற்றி தகவல் அறிய கூகுலை தேடவில்லை. அவர்களது அழகில் மூழ்க ஆசைப்பட்டோம். வாவிநீரில் மேலோட்டமாக அழகாக பரந்து திரிந்த நாரைகள் இங்குள்ள பருந்து, கடல்பறவை, மீன்கொத்தி, மரங் கொத்தி மற்றும் காகங்களுடன் சுமுகமாக இருந்து வந்தன.

கடந்த கிழமை இரண்டு விடயங்கள் என் மனதில் முக்கியமாக இருந்தன. ஒன்று இந்த நாரைகள். மற்றொன்று கோதாகோகமையில் நடந்துவரும் அமைதியான மக்கள் போராட்டம்.

ஒரு நாள் நாரைகளைக் காணவில்லை. நானும் என் வேலைகளை பார்த்துக் கொண்டு போய்விட்டேன். அதே நாள், மதியம் போல, ஆயுதம் தாங்கிய நபர்கள் கோதாகோகமையில் நுழைந்து அவ்விடத்தையும் அங்குள்ள மக்களையும் அடித்து உடைக்க நுழைந்துள்ளனர் என்ற தகவல் செய்தியில் வரத்தொடங்கியது. எவ்வளவோ முறை நாம் அதிர்ச்சியுடன் செய்தி பார்த்தது போலவே இம்முறையும் பார்த்தோம். ஷாகீன் பாக், ஒக்யுபை போராட்டம், கருப்பின மக்களின் பிலாக் லைவ்ஸ் மாட்டர் போராட்டம், அரபு வசந்தம் என்று அழைக்கப் படும் பெரும் போராட்டம், இவை அனைத்திலும் இப்படியான அடித்து உடைக்கப்பட்ட நாட்களை நாம் செய்தியில், இதே போல ஸ்தம்பித்து போய்ப் பார்த்திருக்கிறோம்.

சீக்கிரமே, இதைவிட கொடூரமான செய்தி வரத்தொடங்கியது. போராட்டம் செய்பவர்கள் பதிலடி அளிக்கின்றனர் என்ற செய்தி.

வன்முறை செய்ய வந்தவருக்கு அமைதியான முறையில் அவர்கள் மறு கன்னத்தை காட்டவில்லை. அவர்கள் திரும்ப அடித்தனர். வைத்தியசாலையில் அடிபட்டு சுருண்டிருப்பவரை மேலும் அடிக்கும் காட்சியைக் கண்டோம். வைத்தியர்கள் வெளியே வந்து அடிப்பவரிடம் மன்றாடினர்: "காயப்பட்ட அனைவரும் எங்களுக்கு நோயாளர்களே." "கொலைகாரன் என்றாலும் அவனுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பது எனது கடமை" என்று கூறி மன்றாடினார்கள்.

வீடுகள் அலுவலகங்கள் எரிக்கப்பட்டன. பொதுச் சொத்துக்களும், பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிச் சொத்துக்களும் எரிக்கப்பட்டன. கிறிஸ்தவ மதகுருமார்கள், பௌத்த பிக்குகள் என்று பலர் காலி வீதியில் நடுச்சாமத்தில் அமைதி நிலவ வேண்டும் எனக் கோரி வீதியில் நின்றனர்.

இப்பொழுது வீடுகள் எரித்தது ஒரு சிலரது திட்டமிட்ட செயல் என்கின்றனர். நாட்டில் உள்ள நிலைமையில் அவர்களிடம் இவ்வளவு எண்ணை எங்கிருந்து வந்தது என்று கேட்கின்றனர். நாடு முழுக்க ஊரடங்குச் சட்டம் இருந்தாலும் ஏன் இராணுவமும் பிற பாதுகாப்புப் படையினரும் வன்முறை செய்பவர்களை நிறுத்துவதற்கு அவ்விடத்தில் இல்லை என்ற கேள்வி எழும்பியுள்ளது.




இப்படியான கேள்விகளுக்கு அப்பால், நேற்று நடந்த வன்முறையினால், அமைதியான மக்கள் போராட்டத்தின் அழகு குலைக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிகுறிகள் ஏற்கனவே இருந்தன. அமைதி மற்றும் அஹிம்சை சார் விழுமியங்களை உள்வாங்காத போராட்ட வழிமுறைகள் ஏற்கனவே இருந்தன. ஞானா அக்காவிற்கு எதிரான பல வசனங்கள் வன்முறையாகவும், அவரை ஒரு பெண்ணாக இழிவுபடுத்துபவையாகவும் காணப்பட்டமை இதற்கு ஒரு உதாரணம். அமைதி நிலைத்திருக்க, அதற்கான விழுமியங்களும் கோட்பாடுகளும் இருத்தல் அவசியம். அதையும் நாம் கோதா கோகமையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எந்நேரமும் குடிநீரும் சாப்பாடும் இருந்தமை இதற்கு ஒரு உதாரணம். உக்கும் மற்றும் உக்காத

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

குப்பைகளை பிரித்து தொடர்ந்து அவ்விடத்தினைச் சுத்தம் செய்தவர்கள் அங்கிருந்தனர். தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் வரவேற்கப்பட்டு, கடல் போல் விரிந்திருந்த சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது குரல்களுக்கு முதன்மை அளிக்கப்பட்டது.. இது இலங்கையில் முதல் முறையாக நடந்துள்ளது. இதுவே இந்தப் போராட்டம் மனதைத் தொடும் ஒன்றாக அமையக் காரணம்.

அதே சமயம், ஆதிக்கம் நிறைந்த வன்முறை சார் முறைமைகள், குறிப்பாக ஆணாதிக்க சிந்தனை சார் முறைமைகள் சிறு அளவில் தொடர்ந்து இருந்து வந்தன. பாசில் ஏன் ஒரு காகம் என்று எனக்குப் இன்னும் விளங்கவில்லை. சிங்கள கலாசார மரபு சார் விடயமான இது எனக்குப் புலப்படவில்லை. ஆனால் நம்மிடைய தினமும் பலநூறு கணக்காக வாழும் காகத்தினை இப்படி ஒரு கொடியவனுக்கு சமனாக்குவதில் என்ன நியாயம்? நம்மை அடக்கி ஆள்பவரைக் குறிக்க, இப்படி நம் வாழ்வில் சாதாரணமாக காணப்படும் ஒரு பறவையை ஏன் பயன்படுத்துகிறோம்? மனித ஒடுக்குமுறையுடன் ஒப்பிட இயற்கையில் எந்த ஜீவனையும் அடையாளம் காண்பது அரிது. ஆனால் கண்டிப்பாக எம் இனிய காகம் கொடியவருக்கு ஒத்தது அல்ல.

இந்த வன்முறை நடந்த சில நாட்கள் கழித்து மனமுடைந்து நாம் இருக்கின்றோம். அரசாங்கம் எதிர்பார்த்தவாறே தனது கோரமுகத்தை காட்டியதை எண்ணி மனக்கஷ்டம். அதைவிட, "மக்கள்" என்பவருள் சிலர் அமைதியை கைவிட்டு வன்முறையில் இறங்கத் தூண்டப்பட்டு அந்த தூண்டுதல் வெற்றி அடைந்தது பற்றிய பெரும் சோகம். இப்படியே வன்முறையின் சுழற்ச்சி தொடரும். . . . . .

நாரைகள் இங்கு இருப்பது நாங்கள் நினைத்ததை விட அரிதானது. ஆசியாவில் ஆபத்தான நிலையில் உள்ள பறவை வகைகளுள் ஒன்று இந்த நாரை. இவையுள் குட்டி போடும் இனங்கள் இலங்கை, தென்னிந்தியா மற்றும் கம்போடியாவில் மட்டுமே காணப்படுகின்றன. அவை இங்கு இருந்தது ஒரு விசேடமான விடயம். இன்று அவர்கள் இங்கிருந்து நகர்ந்திருந்தாலும் மீண்டும் வருவார்கள். அதுவும் விசேடமானது.

அமைதியான மக்கள் போராட்டம் இந்த நாரை போன்றது. அடக்குமுறை ஆகவும் கூடியதால், தாங்கமுடியாமல், போராட்டக் களத்தில் சாதாரண மக்கள் இறங்குவது அரிதானது. அப்போராட்டம் அமைதியான முறையில் கொண்டு செல்லப்படுவது இன்னும் அரிது.

"அமைதியே" போராட்டம் குன்றிவிடாமல் தொடர ஒரே வழி என்பதனையும் நாம் திரும்பவும் சமீபத்தில் நடந்த வன்முறையின் மூலம் மீண்டும் அறிந்து கொண்டோம்.

நாம் வாழ்ந்து வரும் உலகத்தில் போராட்டம் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாக மாறிவிட்டது. வாழ்வதற்கான வழியாகவே மாறியுள்ளது. நமது வாழ்வில் சூழ்ந்திருக்கும் அநியாயங்களை மனதில் கொண்டு வாழும் ஒரு வாழ்வில் போராட்டம் அவசியமான ஒன்று. இவ்வுலகில் நாம் வாழும் காலம் சுய மரியாதையுடனும், விழிப்புணர்வுடனும், சுதந்திரம் மற்றும் நீதியை நோக்கிய பாதையில் செல்வதற்கு போராட்டம் அவசியம்.

சுதந்திரமும் நீதியும் தூரத்து கனவு போல இருந்தாலும், அதற்கான பாதையே ஒரு முழுமையான வாழ்முறையை நமக்கு அமைத்துத் தரும் என்னும் நம்பிக்கையுடன் வாழ்ந்தால்தான், இதுதான் எமது விதி என்று சொல்லி அனைத்து வன்முறையினையும் எதுவும் செய்யாமல் தாங்கி கொண்டு வாழாமல் இருக்க இயலும். இதனுள் அமைதி ஒரு வழியல்ல, ஒரே வழி.

இந்த வன்முறை நடக்கும்வரை, இளையவர் முதியவர் என்று சமூகத்தின் எல்லா அங்கத்தவரும் கோதாகோகமைக்கு சென்றனர். இவர்கள் அனைவரும் இனிமேல் வருவார்களா என்று தெரியாது. அவர்கள் வரவில்லை என்றால் அதற்குக் காரணம் வன்முறை மட்டுமே. அனைத்து தரப்பினரால் செய்யப்பட்ட வன்முறை. மக்கள் போராட்டக் களத்திற்கு வரவில்லை என்றால், ஒடுக்குவோர் வீடு திரும்புவதற்கு பதிலாக மக்களே வீடு திரும்பியுள்ளதாக ஆகிவிடும். ஆதிக்கம் செலுத்துவோர் மீண்டும் வென்றிடுவர்.

மீண்டும் நாரைகளுக்கான, அமைதிக்கான வெளியை நாம் எப்படி உருவாக்கலாம்? வன்முறை நடந்துகொண்டிருக்கும்போது இல்லையென்றாலும், அதற்கு பின் சாந்தியை தக்கவைக்க நாம் என்ன செய்யலாம்? இன்று, நாளை மற்றும் முன்வரும் காலங்களில் போராட்டத்தில் எப்படி நாம் அமைதியை தக்கவைக்கலாம்? அமைதியை மீட்டெடுத்தால் மட்டுமே ஆதிக்கம் செலுத்துவோர் வெற்றி பெறாமல் தடுக்கலாம். அமைதிக்கான ஒவ்வொரு செயல்பாடும், அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் சரி, அது மக்களுக்கான வெற்றி.

போராட்டம் வாழ்க.

**மணிமேகலை**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



'இன்னும் ஏன் நடக்கிறோம்' அமைதி நடையின்போது சில நேரங்களில் வழங்கப்படும் துண்டுப் பிரசுரம்

# ஐயோ கடவுளே இன்னும் ஏன் நடந்து கொண்டே இருக்கின்றோம்?

விலைவாசி குறைந்தபாடில்லை. இன்றைக்கு இருக்கும் பெற்றோலும் மண்ணெண்ணெயும் நாளை இருக்குமோ என்ற கேள்வி? பிள்ளைகளின் வருங்காலத்தை நினைத்தாலே பயமாக உள்ளது. இந்தச் சூழலில் பொருளாதார அனர்த்தத்தின் அடிப்படைக் காரணங்களை நிவர்த்தி செய்யாமல் பூச்சு வேலை செய்து கொண்டிருக்கும் அரசாங்கம்.

மக்கள் பசி பட்டினியில் சாகக் கிடக்கும் இத் தருணத்தில் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்வதை விட்டு விட்டு, அமைதி முறையாக அகிம்சையாக வன்முறையற்ற முறையில் ஆர்ப்பாட்டம் செய்த சாதாரண மக்களை, மாணவர்களை, ஆசிரியர்களை, இளைஞர்களை இந்நாட்டு குடிமக்களை சிறையில் இடுவதில் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டு வரும் அரசாங்கம். ஒரு அராஜக ஆதிக்க பூர்வமான அரசாங்கம் மக்கள் போராட்டத்தால் வெளியேற்றப்பட்டும் இன்னொரு அராஜக அரசாங்கம் ஆட்சி புரிந்து வருகிறது.

**இந் நிலையில் நாங்கள் ஏன் நடக்கிறோம்?**

எங்களுக்கு மன நிம்மதி தேவை. எமது கோட்பாடுகள் நம்பிக்கைகளில் வேரூன்றி நிற்பது இன்று அவசியமாகிறது. ஜனநாயக ரீதியான, அடிப்படை உரிமையான எதிர்ப்பு தெரிவிக்கும் உரிமை கொடூரமாக மறுக்கப்பட்டுவரும் இக் காலத்தில் அவ் உரிமையை விட்டுக்கொடுக்காமல் தினமும் பயன்படுத்துவது எங்களுக்குத் தேவை. இத் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாங்கள் நடக்கின்றோம். ஒரு நாள் மாற்றம் வரும் என்ற நம்பிக்கையுடன் நாங்கள் நடக்கின்றோம். இந்தக் கொடூர காலத்தில் இவ் ஊர் மக்கள் 100 நாட்களுக்கு மேல் எதிர்ப்பை தெரிவித்தனர் என்ற வரலாறு, வரும் வருங்கால சந்ததியினருக்கு ஒரு அரிய பரிசாக விளங்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் நடக்கின்றோம்.

இயலுமென்றால் எங்களுடன் நீங்களும் சேருங்கள். முழுதாய் சேர இயலாதென்றாலும் வேலைக்கு போகும் வழியில் ஒரு இடமிருந்து மற்றொரு பக்கம்வரை எங்களுடன் நடவுங்கள். நடக்க சிரமமாக இருந்தால் தெரு வழியே போகும் எங்களுக்கு தண்ணீர் கொடுங்கள். உங்களை மனதார வாழ்த்தி சந்தோசமாக நாங்கள் தண்ணீர் குடிப்போம்.

**எப்பொழுதுவரை நடக்கப் போகின்றோம்?**

இப்பொழுது உள்ள அரச கட்டுமானம் மாறும் வரை நடப்போம். சமூக மக்களான நமக்கிடையே நம்பிக்கை வளர்ந்து நாம் ஒன்றுபடக்கூடிய நிலைமை வரும் வரை நடப்போம். தினசரி வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யும்வரை நடப்போம். எதிர்கால சந்ததியினரின் வருங்காலம் பற்றிய ஒரு நம்பிக்கை வரும்வரை நடப்போம். விடியலாய் மலரும் அந்நாளை காணும் வரை நடப்போம்.

நம் ஒரு கண்ணைப் பிடுங்கியவரைப் பழிவாங்க அவரது கண்களைப் பிடுங்கினால் உலகமே குருடாகும் என்பதை நாம் அறிவோம். அராஜக தொணியோடு அதிகார மொழியோடு நாங்களும் பேசினால், செயற்பாடுகளை மேற்கொண்டால் நமக்கும் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் என்ன வித்தியாசம். இந்த புரிதலுடன் எங்களது நடை அகிம்சை முறையில் அமைதியாக வன்முறையற்ற முறையில் அபார நம்பிக்கையுடன் தொடர்ந்து செல்லும். வன்முறையற்ற அமைதியான இந்த நடை தொடர்ந்து செய்யக்கூடியதொன்றாகவும் தக்கவைக்கக்கூடிய தொன்றாகவும் விளங்குவதை நாங்கள் இவ்வளவு நாட்கள் நடந்து உணர்ந்துள்ளோம்.

இந் நடையில் உள்ள அமைதியும் சாந்தியும் உலக கட்டமைப்புகளுக்கு மாறாக, எமது மனசாட்சி எமது உள்ளார்ந்த குரலில் இருந்து எழும்பும் இந்த விழுமியங்களில் வைக்கும் நம்பிக்கை ஆகிய அனைத்தையும் நாங்கள் கனவு காணும் உலகத்தின் அங்கமாகவே எண்ணுகிறோம். அந்தக் காலம் கைகூடும். அது வரை நம்பிக்கையுடன் நாங்கள் நடக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் நேசித்த என் வீடு
சிதிலமடைந்து
வெண்ணீத்துச் சுவர்கள்
விழுந்து உதிர்ந்து
கறையான் அரித்து
வாசற்படியில் கிடந்த
என் காலடித்தடயங்கள்
தூசு மண்டி
உருஅற்றுக்கிடந்தது
குறுக்குச் சந்தியில்
வேண்டித்தின்ட
தும்புமுட்டாஸின் இனிப்பு
இன்னும் மாறவில்லை
திரைவிரித்து எட்டிப்பார்க்கும்
அந்த வேம்பின்
அடி மட்டும் மிச்சமாய்
புல்மண்டி காடுபத்திக் கிடந்த
கிணற்றடி ஓரம்
அம்மாவிடம் திருடிய
நாணயக்குத்திகளுக்காய் மனம்
அலைந்தது
விறாந்தையில் பாய்விரித்துக் கிடக்கும்
என் குழந்தைப் பருவம்
அந்த வீட்டில்
கிழிந்த ஆடையுடன் அலைகிறது
இன்னும்!

அடிவானில் நிலவு கிளம்ப
தூங்கிய கடல் விழித்தது.
நீர்க் காக்கைகளாய்
படகுகள் அசைய
மேற்கிளம்பும் நிலவில்
கடல் மின்னியது.
கரை தேடும் அலைகள்
கால் நனைக்க
சலனமற்று வெகு நிதானமாய்
இரையும் அந்தக் கடல்
பாட்டி சொல்வாள்
பெண்ணலை இராஜகுமாரியாம்
மணமுடிக்க வந்த இளவரசனிடம்
சிக்காமல்
கடலில் அலையாய் மடிந்தாளாம்
பின்னே ஆண் அலை
துரத்தியபடி
எங்கோ கத்திய
கிக்கிலிபொச்சானின் சத்தம்
மௌனம் கலைக்க
போவமா என்றாய் !
கும்மிருட்டில் மூழ்கிப்போய்க்கிடக்கும்
அந்த அறையில்

மீண்டும் போய் ஒடுங்கிக் கொள்ள
மனம் ஒப்பவில்லை
இதே கடற்கரையில்
விடியும் தொடுவானின் நிறம் காண
மணலில் கிடந்தது ஞாபகம் வந்தது
நாளைக்கு நிறைய வேல இருக்கு
எழுந்து ஒட்டியிருந்த
மணல்களைத் தட்டுகிறாய்
அதே அறை அதே இருட்டு
அதே வாகனங்களின் இரைச்சல்
மீண்டும் மீண்டும்
ஒட்டிய மணல்கள் உதிர்கின்றன.
நண்டுகள் மீண்டும் மீண்டும் வரைவதும்
கடலை அழிப்பதும்
பாதங்கள் ஆழமாய்ப் புதைய
நடக்கின்றேன் - உன் பின்
ஒட்டிய மணல்களை
தட்ட விரும்பாதவளாய் !

**கலாவதி கலைமகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பாலே நடை நடையாய்

**2004** ஒரு நாள் காலை. அன்று ஞாயிறு விடுமுறை நாள். ஆறுதலாக எழும்பி தேத்தண்ணி கோப்பையுடன் வீட்டு முன் விறாந்தைக் கட்டில் குந்தி இருந்த போது "கடல் வருது ஓடுங்கோ" என்ற சத்தம். தினுக்கிட்டு விழித்து ஓடுமுன் பேரிரச்சல்··· பலரது வாழ்வை அள்ளிப் பருகி அமைதியானது கடல்.

அமைதி···

2009 கருகி கருகி சனங்கள். தினம் தினம் சாக்கடாய் ஆனது தேசம்··· ஒரு கால் ஓடி, பல நாள் நடந்து, வாழ் நாள் கடந்து, பலரை இழந்து ···மலைகள் சரிந்து ..அனைத்தும் அழிந்து··· வெற்றிக் கொடி ···

அமைதி···

"எப்படியாவது வீட்டைக் கட்டி முடிக்கணும், சின்ன வாகனம் எண்டாவது வாங்கனும், ஒரு ஏக்கறில சாப்பிடவாவது வெள்ளாம செய்யனும்····." யாரிட காலிலயாவது விழுந்து வேல ஒண்ட வாங்கிக் குடுக்கணும்···கனவுகளுடன் தூங்கி···
மறு நாள் முழிக்கையில்··· விழி பிதுங்கியது,
வீட்டின் கூரையை விட விலைகள் உயர்ந்திருந்தன
"சாமான்கள் இல்லை" என கடைகள் கையை விரித்தன
"பெற்றோல் இல்லை போங்கோ" என்று கயிறுகள் முறுகின
மக்கள் வரிசையில் இறுகிப்போயினர்···

ஊரடங்கு சட்டம்·····பயங்கரவாதச் சட்டம்..···விரும்பாத விருந்தாளிகள்··· மீண்டும் இராணுவம் ··· வண் ரூ (one, two) விற்காய் காத்திருக்கும் ரெடி நிலைத் துப்பாக்கிகள்.

அனல் காற்றினூடே சில மனிதர்கள் ····.மெதுவான நடையுடன், சென் செபஸ்தியார் ஆலயத்தில் இருந்து காந்தி பூங்காவரை···தினம் தினம்.. நடந்து கொண்டிருந்தனர்..
வரிசையில் நிற்கும் நெரிசல்களைக் கடந்து···

"எனது பிள்ளைகள் பழையபடி மூன்று நேரம் சாப்பிடனும், மருந்து குளிசைகள் வாங்கனும் என்றால் அதையும் காசுக்கு வாங்காத பழய நிலை வர வேண்டும்····.பொருட்களுக்கெல்லாம் தட்டுப்பாடு வரக்கூடாத நிலை இனி வராதா.."
"ஏதாவது கேட்டால் அது எம்மை எமது பாதுகாப்பிற்கு பிரச்சனையாக்கி விடுமோ என்ற பயம்···
எனினும்,

மக்கள் கோரிக்கைகள் பல வடிவங்களில் உயர்ந்தன···அவை முன்வைக்கப்பட்டன. பல இடங்களில் கோரிக்கைக் குரல்கள்···காலி முகத்திடல் மக்கள் குரல்! பல கதிரைகளை ஆட்டம் காணச் செய்தன.

நாளை பற்றிய பயங்கள், தொடரும் கேள்விகள், மக்கள் வரிசைகள், ஊரடங்கு சட்டங்கள், பொருள் தட்டுப்பாடுகள் இவற்றை ஊடறுக்குமுகமாக, ஊடறுத்தபடி

மட்டக்களப்பில் "நியாய நடை" ஆரம்பமானது. தினமும் தினமும் காலை ஒன்பது மணிக்கு செபஸ்தியார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும் அமைதியான நடை அரசடி சுற்று வட்டாரத்தின் ஊடாக சென்று காந்தி பூங்காவை சென்றடையும். இருநூற்றி இருபத்தைந்தாவது நாளையும் தாண்டி இந்நடை தொடர்ந்து கொண்டுள்ளது.

அப்போதெல்லாம் அந்த அமைதி நடை தொடர்பான துண்டுப்பிரசுரங்கள் சில நாட்களில் ஆங்காங்கு வழங்கப்பட்டுக் கொண்டு இருக்கும். அவர்கள் தமது முதுகுகளில் நெஞ்சங்களில் தமது உள்ளக் கருத்துக்களை தொங்கவிட்டபடி நடப்பார்கள். கைகளில் "இன்னும் ஏன் நடக்கிறோம்" என்ற வாசகம் எழுதப்பட்ட நீண்ட துணியை இருவர் அல்லது மூவர் பிடித்தபடி செல்வர். மூவர் இல்லாத சந்தர்ப்பத்தில் நடுவில் காற்று அதனை தூக்கியபடி அவர்களுடன் சேர்ந்து நடக்கும்.

பலரது கதைகளைத் தாண்டி, "இவங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே நடக்கிறவங்க"… குசு குசுப்புக்களைத் தாண்டி "இதுகளுக்கு இதால என்ன கிடைக்கப் போகுது" பயங்களைத் தாண்டி "நம்மள அள்ளிக் கொண்டு போய் உள்ளுக்க போட்டா" அவர்கள் நடப்பார்கள்…அமைதியாக ஒருவர் பின் ஒருவராக ..பழகி விட்டது அந்த வீதிக்கு அவர்கள் நடை…

நடை பழகிவிட்ட தேசம் இது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடி நடை நடையாய் அலையும் மக்கள்…துப்பாக்கி வெடிகளுக்கு ஒதுங்கி, வெட்டும் வாள்களுக்கு ஒதுங்கி, தலை ஆட்டும் பொம்மைகளுக்கு ஒதுங்கி … ஒடுங்கி… ஒதுங்கி… நடை நடையாய் இடம் பெயர்ந்து.. நடை பழகிவிட்ட தேசம் இது.

நடை ஒன்றும் புதிதல்ல …இன்று அவர்கள் பொருளாதார நெருக்கடிக்கு நடை நடையாய்…,

நடையிடையே உற்றுக் கேட்டால் மெல்லிய பாடல் அசைவற்ற உதடுகளிடையே ஓடும்…

நடை நடையாய்
நடை நடையாய்
நடக்கின்றோம் நடை நடையாய்

அலை அலையாய் நடை நடையாய்
நடக்கின்றோம் நடை நடையாய்

அன்பாலே நடை நடையாய்
அகிலத்துக்காய் நடை நடையாய்

பாசத்தால் நடை நடையாய்
முள்ளும் உதிர நடை நடையாய்


பொழுதும் புலர நடை நடையாய்
இருளை விலக்கி நடை நடையாய்

பாதை தெரிய நடை நடையாய்
உண்மைக்காய் நடை நடையாய்

நம்பிக்கையாய் நடை நடையாய்
நாளைக்காய் நடை நடையாய்

கர்வம் மாற நடை நடையாய்
கருணை பெருக நடை நடையாய்

கேள்விகள் கேட்க நடை நடையாய்
எழுந்திடுவோம் நடை நடையாய் ….





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேவை! தொழில்

"பெண்ணியம்", "தொழில்" ஆகியவற்றில் உழைப்பு என்றால் என்ன?

சேவை என்றால் என்ன?

இன்று ஆணாதிக்க வஞ்சப் புகழ்ச்சியினால் "சேவை" என்பதன் அர்த்தமும் "உழைப்பு" என்பதன் அர்த்தமும் வேறாகியிருப்பதை அவதானிக்கலாம். ஆண்கள் செய்கையில் வருமானம் சார்ந்தும், பெண்கள் செய்கையில் சேவை, அர்ப்பணிப்பு, கடமை, அக்கறை, கவனிப்பு, இயல்பு என்றெல்லாம் வர்ணம் பூசுவது ஆணாதிக்கத்தின் வஞ்சகப் புகழ்ச்சியாகவே கருதப்படுகிறது!

இதுதவிர இன்று மக்களுக்காக கல்விமான்களால் ஆற்றப்பட வேண்டிய தார்மீக சேவைகள் சில்லாப காரணக்களுக்காக இல்லாது செய்யப்படுவதையும் அவதானிக்க முடிகிறது.

எடுத்துக்காட்டாக சுகாதார சேவையா? அல்லது அது சுகாதார உழைப்பா? என்று யோசிக்க வேண்டிய அளவுக்கு உள்ளமையை அவதானிக்கலாம்.

உண்மையில் சேவை என்பது அர்ப்பணிப்புடனான செயற்பாடாகும். உழைப்பு என்பது ஊதியத்துடனான செயலாகும். அதற்காக ஊதியம் வாங்கி மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் சேவை இல்லை என்பதுமல்ல!

சேவையாக மேற்கொள்ளப்படுகின்ற காரியங்களுக்கு ஊதியம் வழங்கப்படலாகாது என்பதும் பொருளல்ல!

சம்பள அதிகரிப்பு, மேலதிக கொடுப்பனவு கோருதல் முதலான தொழிற்சங்க போராட்டங்களை நடாத்துவது நமது உரிமையாயினும் மக்கள் நலன் பாதிப்படையக்கூடியவாறு அக்கோரிக்கைகள் அமையுமாயின் அது சுயநலமாகும்! ஆக, இங்கேதான் சேவை மற்றும் உழைப்பு என்பதன் அர்த்தங்கள் செயற்படக்கூடிய தருணமாகும்.

என்னதான் தனிப்பட்ட கோரிக்கைகளாயினும் அது மக்களை பாதிக்குமென கல்விமான் / அரச கடமையாளர் ஒருவர் தனது மனசாட்சியால் உணர்ந்து அதை மக்கள் நலனுக்காக தவிர்த்தோ அல்லது தனது கொள்கையில் தளர்வையோ கடைப்பிடித்தவாறு தனது பகிஷ்கரிப்பையும் மக்கள் தேவைக்காக அத்தருணம் அர்ப்பணிப்பாராயின் அதுவே அவரது தொழில் தர்மத்தின் சேவையாகும்! பகிஷ்கரிப்பின் போதும் மக்களின் நலன் கருதி விமர்சனங்களையும் எண்ணாது அன்றைய தினத்தின் கடமையிலும் கண்ணியமாக இருந்து செயற்படுவது அவரது உன்னத உழைப்பாகும்.

- றோஸ் -

ஏவி விடப்பட்ட அம்பென
மேகத்துள் இருந்து வந்து
மீன் கொத்திச் செல்கிறது
பருந்து

கூர்திறன் பார்வை
மீனுடை மினுக்கம்
நீரிடை மங்குமுன்
வந்துவிடும் வேகம்
நழுவாது கௌவும் லாவகம்
விமானம் போல்
சுமை தூக்கி
வானேகும் வலிமை
பருந்துக்கு
உண்டென்றா சொல்கிறாய்?

இல்லை நண்பா
பசிக்கு உண்டு!

நன்றி
**கவிஞர் வாசுதேவன்**
**'என் புழுதி ரசம்'**

## உழைப்பாளி

சோலை வனப்பூக்கள்
தருகின்ற
கண்குளிர்ச்சிக்குப் பின்னால்
இயற்கையின்
இதமான வேலைப்பாடுகள் இருக்கின்றன...

வேலை வாய்ப்புகள்
அற்ற தளம்
பாலை நிலம் போன்றது!
வறட்சி - அங்கே
தாமத விருத்தி!

இயற்கை பெரும் உழைப்பாளி!
அழகியல் சிற்பி!
மிக இரசனையாளி!

உழைப்பாளியின்
இரசனைமிகு
தொழில்முறைமையோ
பேரழகு - தருகிறது.
நமக்கு பேரானந்தம்.

- றோஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுத்த நாவல் மரம்

அவள்…
பழுத்த நரையும்
சுருங்கிய பழுப்பு நிறத் தோலும்
வாயில் இரட்டை பல்லுடன்
முற்றிய நகங்களுடன் அவள்.

சுருங்கிய தோல்களுக்கிடையே
மினு மினுக்கும் அவளது
சிவப்புக்கல் பதித்த
மூக்குத்தியும்
பொக்கை வாயில்
இருந்து
முத்து கொட்டுவதுபோல் வரும்
சிரிப்பும்
அவளை இன்னும்
அழகுபடுத்திக் காட்டுகிறது.

சாறியிலிருந்து
சோட்டிக்கு மாறிவிட்டாள்.
நவீன மாற்றம்
அவளையும் விட்டு வைக்கவில்லை.
அவளின் இயலாமையை எண்ணி
"என்ன செய்யிறது
வயசு போனா அப்படித்தான்
காது கேக்காது, கண் தெரியாது
நடக்க ஏலாது"
என்று கூறி அவளது பொக்கை வாய்
புன்னகையை
தூவி விடுவாள்.

மெலிந்த தோற்றமும்
கூன் விழுந்த
முதுகையும் கொண்டு
வயோதிபத்தின்
உச்ச கட்டத்தை
பறைசாற்றிக் கொண்டு இருக்கிறாள்

தன் இளமையில்
ஓடாய்த் தேய்ந்து
அயராது கண்விழித்து
தன் செல்வங்களை
முத்துக்களும் மாணிக்கங்களுமாக
பெருக்கி
கடமை முடிந்ததும்
ஓய்வு காலத்தை
நாலுகால் கட்டிலுக்குள்
முடக்கிக் கொண்டாள்

அவள் வைத்த நாவல் மரக்கன்று
வளர்ந்து மரமாகி கிளைவிட்டு
பூக்கள் பூத்து பழங்கள்
தந்து
தன் கன்றுகளை
உருவாக்கி
பெருவிருட்சமாக
கம்பீரமாக
காட்சியளிக்கிறது
ஆணி வேரான அவளின்
துணைகொண்டு.....

- சௌமி சேகர் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பூமியே இயற்கையே
நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ
வரம் தந்தாய் வாழி
மாரியே நீ பொழிவாய்
நீ வாழி வாழி
ஊற்றுக்கள் சொரியட்டும்
நீர்வாழி வாழி
காற்றுடன் எரிக்கும் வெயில்
பனிப் பொழிவும் வாழி
பொங்கும் கடல், மலைகளுடன்
பல்மண்ணும் வாழி

மண்ணுக்குள் வாழும் நம்
உயிர்கள் வாழி
காற்றிலும் கலந்துள்ள
சிற்றுயிர்கள் வாழி
ஓடும் உயிர் ஊரும் உயிர்
பறக்கும் உயிர் வாழி
நிற்பதுவும் நடப்பதுவும்
நீந்துவதும் வாழி,
ஆழத்தில் வேரூன்றும்
பெருமரங்காள் வாழி
அடியோடி நிலம் பரவும்
புல்லினங்காள் வாழி

பூமியே இயற்கையே நீ வாழி வாழி
பல்லுயிரும் வாழ உன்
வரம் தந்தாய் வாழி
சந்திரரே சூரியரே வாழிய வாழி
அண்ட சராசரங்கள் வாழ நீடூழி!!!

**'சமதை' பெண்ணியக் குழு**





**புகைப்படங்கள்**
**- சௌமி சேகர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயக் கிராமமும் கலைச் செயல்வாத முன்னெடுப்புகளும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமையானது, மக்களை வீதியில் இறங்கி போராட வேண்டிய தேவையை உருவாக்கி விட்டிருக்கிறது. அத்தியாவசியமான பொருட்களினதும், சேவைகளினதும் தட்டுப்பாடும், விலையேற்றமும் இவ்வாறான நிலமைக்கு மக்களை நிர்ப்பந்தித்துள்ளது. திறந்த பொருளாதார கொள்கையின் கீழ் இலங்கையின் பெரும்பாலான அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதி செய்யப் படுகின்றமை காரணமாகவும், நாட்டின் பெரும் பங்கு பணத்தை இறக்குமதிக்காக செலவிட வேண்டியிருக்கின்றது.

இந்நிலையில், அரசாங்கத்தின் தூர நோக்கற்ற தற்காலிக பொருளாதார தீர்வுகள் மேலும் மேலும் சாதாரண மக்களின் வாழ்வியலை பாதிப்புக்குள்ளாக்கிக் கொண்டுள்ளது. குறிப்பாக நாட்டில் அனைத்து பொருட்களினதும் விலையேற்றம் தினக்கூலிகளாக வேலை செய்பவர்களை பாதிப்புக் குள்ளாக்கி வருகின்றது. மூன்று வேளை உணவு என்பது, இரண்டு வேளை உணவாகவும், இன்னும் சில இடங்களில் ஒருவேளை உணவாகவும் மாறியுள்ளன. நாடு முழுவதும் உள்ள பாடசாலை மாணவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் பல்வேறு வகையில், போசாக்கின்மை மற்றும் உணவு பற்றாக் குறை பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர்.

மதிய உணவிற்காக தேங்காய்த் துண்டு களை பாடசாலைக்கு கொண்டு சென்ற மாணவியின் நிலையும், கர்ப்பகாலத்தில் உரியமுறையில் போசாக்கான உணவுகளை உட்கொள்ளமுடியாமல் தவித்த கர்ப்பிணியின் அங்கலாய்ப்பும், பெற்றோல் வரிசையில் காத்திருந்தே உயிரிழந்தவர்களின் நிலையும், மருந்து வகைகளையும் பெற்றுக் கொள்ள முடியாமல் அவதியுற்றவர்களின் நிலைப்பாடும் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நிலைமையை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டிநிற்கின்றன.

இந்த நிலைமையில், இலங்கை வாழ் ஒட்டு மொத்த மக்களின் குரல் வெளிப்பாடு ஜனாதிபதி உட்பட நாட்டின் ஒட்டுமொத்த அரசாங்கமும் பதவி விலக வேண்டும். அமைப்பு மாற்றம் வேண்டும் என்பதாகும். இந்த அடிப்படையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மக்கள் போராட்டத்தில் குதித்தனர். கோட்டா கோகம, மைனா கோகம, என போராட்டம் நாடுமுழுதும் வெடிக்கத் தொடங்கியது புதியதொரு அரசியல் மாற்றத்திற்காகவும், அரசியல் முறைமை மாற்றத்திற்காகவும், இதுவரை காலமும் அரசாங்கம் கவனிக்காது விட்ட பல்வேறு விடயங்களை முன்னிறுத்தி போராட்டம், பதாதைகளை ஏந்திய வண்ணமும், கலைச் செயல்வாதமாகவும் தொடர்ந்தன.



போராட்டத்தின் தீவிரம் உணர்ந்து, மக்களை பல்வேறு வகையிலும் திசைதிருப்பும் முயற்சியில் அரசாங்கம் பல்வேறு குழறுபடிகளை முன்னெடுத்த போதும், எல்லா வகையான தடைகளைத் தாண்டியும், நாட்டின் ஜனாதிபதியையும், பிரதமரையும் பதவி விலக செய்திருந்தது போராட்டம். இத்தகையதொரு போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், பல்வேறு அமைப்புகளும் பல்வேறுவகையில், "கோட்டா கோ கம" விற்கு வலுசேர்க்கும் வகையில் போராட்டத்தை முன்னெடுக்க முனைப்புக் காட்டின.

இந்த அடிப்படையில் மட்டக்களப்பிலும் நியாய நடை தொடர்ந்தது. சென் செபஸ்தியார் ஆலய முன்றலில் இருந்து காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும் அமைதி நடை பயணம் காந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூங்காவை நோக்கி பிரதான வீதியின் ஊடாக தொடர்ந்து நடந்து வருகின்றது. மக்களின் பல்வேறு கோரிக்கைகள், தேவைகள், உரிமைகளை வெளிப்படுத்தும் பல்வேறு வடிவமைப்புக்களிலான பதாதைகளை தாங்கிய வண்ணம் நியாய பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. 12.05.2022 அன்று ஆரம்பமாகிய பயணம் இன்றளவில் 200 நாட்களை தாண்டியுள்ளது.

நியாய நடையின் தொடர்ச்சியாக, பிரதி சனிக்கிழமைகள் தோறும் காந்திபூங்காவில், மாலை 4.30மணிக்கு, கலைசெயல்வாத முன்னெடுப்புகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை என்பது பல்வேறு வகையில், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, ஆண், பெண், பால் பல்வகைமையினர் என பேதங்கள் எதுமில்லாமல், பல்வேறுவகையான அழுத்தங்களுக்கு அனைவரையும் உட்படுத்தியிருக்கின்றது.

இந்த நிலையில், ஆயுதமேந்தி மக்களை மக்களே தாக்கிக்கொள்ள அரசியல் சூழ்ச்சிதாரர்கள் முன்னெடுத்த அனைத்துவகையான முன்னெடுப்புகளையும் முறியடித்து, அஹிம்சை வழியில், அறவழிபோராட்டமாக மக்கள் போராட்டம் பலம் பெற்றது.

மக்கள் போராட்டம், இலங்கையின் அரசியல் வரலாற்றில், மிக முக்கியமானதும், பலமானதுமான போராட்ட வடிவத்தை மக்கள் மத்தியில் முன்மொழிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, நிகழ்த்துகைகளாகவும், கலந்துரையாடல்களாகவும், ஆற்றுகைகளின் ஊர்வலமாகவும், உரிமை வெளிப்பாடாகவும், இசை நிகழ்வுகளாகவும், வாத்தியங்களின் முழக்கங்களாகவும், ஆக்கபூர்வமான அரசியல் குரல் வெளிப்பாடாகவும் என பல்வேறு வகையான மிகமிக முக்கியமானதும், முற்போக்கானதுமான வடிவங்களை மையப்படுத்தியே மக்கள் போராட்டம் வலுப்பெற்றது.

இதனுடைய தொடர்ச்சியாக, என்ன செய்வதென்று தெரியாமல், அரசியல்வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளை நம்பியும், மிரட்டல்களுக்கு பயந்தும் அரசியல்வாதிகளின் கைக்கூலிகளாக தொடர்ந்தும் இருந்து கொண்டிருந்த சிலருக்கு மத்தியில், போதும், வீட்டுக்கு போங்கள் என்ற நியாயமான கோசத்துடன் மக்கள் போராட்டம் தொடர்ந்தது.

இத்தகையதொரு நிலையில், மட்டக்களப்பு நியாய கிராமத்திலும், முற்போக்கான விடயங்களைச் சொல்லுகின்ற, சிந்திக்க வைக்கின்ற பாடல்களும், கலந்துரையாடல்களும், நிகழ்த்துகைகளும், நடமாடும் கேலிச் சித்திரக் காண்பியமும், ஓவியங்களும் என கலைச் செயல்வாத முன்னெடுப்புக்களும் மக்கள் போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில், நியாய கிராமச் செயற்பாடுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

பாரம்பரிய கூத்தின் ஆட்டக் கோலங்களை கையாண்டு ஆற்றுகை செய்யப்பட்ட ஆற்றுகை "மனிதர்களை மனிதர் கொல்லும் வாழ்க்கை தன்னை வெற்றி என்றோம்/மனிதருடன் மனிதர் வாழும் வாழ்க்கையல்லோ வெற்றியாகும்" (கூத்து மீளுருவாக்கபாடல்) நியாய கிராமத்தின், அஹிம்சை வழி போராட்டத்திற்கு வலு சேர்ப்பதாகவே இவ் ஆற்றுகை அமைந்திருந்தது. மூன்றாவதுகண் நண்பர்களினதும், சமதைபெண்ணிலைவாத நண்பிகளினதும், மாற்றுத்திறனாளி பெண்களினதும், பாடசாலை மாணவர்கள் என இன்னும் பலரதும் முற்போக்கான அம்சங்களை வெளிப்படுத்துகின்ற பாடல்கள் பாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது நிலம், எங்களது உழைப்பு சுரண்டப்பட்டுக் கொண்டிருக்கும் காலப்பகுதியில், "எங்களின் உழைப்பில், எங்களின் விதைப்பில் விளைவித்தே வாழ்வோம் …" என்ற வகையிலும், "உண்மை காண திரண்டோம்/ நீதி கேட்டெழுந்தோம்…" என்றும், " நான் என்ற சொல் அகற்றி நாம் என்று சொல்லுவோம்…" என்றும், " தோட்டம் செய்வோமே தோட்டம் செய்வோமே பள்ளிக்கு போய் வந்து தோட்டம் செய்வோமே…" என்றும். " ஐயோ பிளாஸ்டிக் ஆகாது போடாதே என் மேனி எங்கும் காயங்கள் தராதே…" என்றும், "அன்போடு நாம் இருந்தால்…" என்றும் "நாங்கள் வாழ வேண்டும் இந்த பூமியில் …"என்றும் இன்னும் பலவகையிலும், முற்போக்கான, சமூக சமத்துவத்தை வலியுறுத்துகின்ற பாடல்களின் ஊடாக நியாயகிராமத்தில் மக்களது உரிமைக் குரல்கள் எழுப்பப்படுகின்றன.

இதனுடைய தொடர்ச்சியாக, நியாய கிராமத்திற்கு வருகின்ற சிறுவர்களின் பங்கு பற்றுதலுடன், ஓவிய பதாதைகளை உருவாக்குதல், ஓவியங்களை வரைதல், காட்சிப்படுத்தல் போன்ற நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நியாய கிராமமானது, நடமாடும் கேலிச சித்திர காண்பியம், சிறுவர்கள், பெரியவர்கள் என அனைவரதும் கருத்து பரிமாற்றத்திற்கான தளத்தை பெற்றுக் கொடுத்து வருகின்றது. பல்வேறு சமூகங்கள் வாழும் இலங்கை நாட்டில், அரசியல்வாதிகளின், இராஜ தந்திரத்தால் இதுவரைகாலமும் முடியாது போயிருந்த நிலையில், "கோத்தா கோ கம" மக்கள் போராட்டக் களம், நல்லிணக்கத்திற்கான பாதையை உருவாக்கியிருந்தது. இதனுடைய மற்றொரு பரிமாணமாக, நியாய கிராமத்தில், மட்டக்களப்பு வாழ் பழங்குடிகள் சமூகம், பறங்கியர் சமூகம் என மற்றைய சமூகத்தினரை உள்வாங்கி கொண்டு, அவர்களின் கலை வெளிப்பாட்டின் ஊடாக



அவர்களின் உரிமை வெளிப்பாட்டிற்கான தளமும் திறந்து வைக்கப்பட்டது.

குறிப்பாக இந்த பொருளாதார நெருக்கடி நிலமையில் மேலும் மேலும் மிக மோசமாக பாதிக்கப்படுபவர்களாக பெண்களே இருந்து கொண்டிருக்கின்ற நிலையில், அவர்களின் குரல்களும் நியாயக் கிராமத்தில், நிகழ்த்துகைகளின் ஊடாக வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்தவகையில் அறவழி போராட்டமாக, தொடரும் நியாய நடையின் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நியாய கிராமத்தின் செயற்பாடுகள், உரிமை கோரி தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

**சுலக்சனா**
கிழக்குப் பல்கலைக்கழகம்



**ஆயிரம் பேருக்குள் நான் நடக்கையில்**
**நான் நடப்பது எனது இரு கால்களினால்**
**தனித்து நான் நடக்கையில்**
**என்னை நடப்பிப்பது என் இரு கால்கள்**
**நபர்களா ….நடத்தலா… எது,**
**என் இருத்தலை தக்க வைத்திருப்பது..?**
**நடத்தல் மூலம் நான் வாழ்கிறேன்**
**அது போதும் எனக்கு**
**தினம் தினம்**
**நான் எழுவதற்கு. - விஜயலட்சுமி -**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டக் காலங்களில் கலைஞர்களின் பங்கு

உதாரணம் காட்டும் அளவிற்கு இன்று எமது நாடு உலகமே வாய் மூடாது பேசும் வகையில் பொருளாதார ரீதியில் மிகவும் பின்னடைவைச் சந்தித்துக் கொண்டுள்ளது. எங்கும் இந்த நெருக்கடிக்கெதிரான போராட்டங்கள். அரசியல் உட்பட அனைத்திலும் மாற்றம் வேண்டும் என்ற மக்களின் போராட்டக் குரல்கள், கலை வெளிப்பாடுகள், மக்களின் போராட்டத்திற்கெதிரான அரசின் சட்டங்கள், நடவடிக்கைகள்…

இவ்வாறான சூழலில் கலைஞர்களின் பங்கு பற்றி தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார் இந்தியாவைச் சேர்ந்த அரங்கவியலாளர் அ.மங்கை அவர்கள்.

இவர் மக்களது போராட்டத்தின் ஒரு வடிவமாக மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் பொது மக்களது அமைதி நடையில் கலந்து கொண்டார். அந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வமைதி நடையில் கலந்து கொண்ட தனது அனுபவத்தை பட்டறை மூலம் ஒரு கோட்டுருவாக உருவாக்கியுள்ளார். (அது முழுமையான நாடகமாக இப்போது பல இடங்களில் நடத்தப்படுகிறது.)

தினமும் காலை ஒன்பது மணிக்கு மட்டக்களப்பு சென் செபஸ்தியார் ஆலய முன்றலில் தமது அமைதி நடையை ஆரம்பிக்கும் இவர்கள், காந்தி பூங்காவில் உள்ள காந்தி சிலையை சுற்றி இருக்கும் கம்பி வட்டத்தில் தாம் பிடித்து வந்த "ஏன் இன்னும் நாம் நடக்கிறோம்" என்ற நீண்ட துணியை தொங்க விட்டு அங்குள்ள சிறு பாலை மர நிழலில் அமர்வார்கள். உடன் நடந்து வரும் மங்கை அவர்களும் அவர்களுடன் அமர்ந்து இவ்வாறான மக்களது போராட்டங்கள், அதில் கலைஞர்களின் பங்கு ஆகிய தனது அனுபவத்தை பகிர்வார். இவரது இந்த பகிர்வு மர நிழல், வீடு என தொடர்ந்தது.. அதில் இருந்து சிறு பகுதியை தொகுத்து இங்கு அளிக்கிறோம்.

"அரங்கம்தான் என்னுடைய துறை. ஆரம்ப காலங்களில் பெண்கள், அரசியல் இயக்கங்களில் ஒரு போராட்டம் நடத்துகிறோம் என்றால் எங்களது போராட்டத்தை, கோரிக்கையை முன் நகர்த்துவதற்கான செயற்பாடுகளாக நாடகம் போன்ற கலைகள் இருக்கும்.

பெண்சிசுவதை, கருக்கலைப்பு பற்றிய விடயங்கள் இப்படித்தான் நாடகங்களாகின. அதேமாதிரி 2000ம் ஆண்டுகளில் திருநங்கையர் அவர்களுக்கான வாக்காளர் அட்டை சார்ந்த விடயங்கள் பற்றி பொதுவில் கதைக்க முடியாமலிருந்தன. ஆகவே எல்லா இடங்களிலும் இந்தத் தகவலையும் கொண்டு போக வேண்டும் அதே சமயம் மக்களின் ஆதரவையும் எடுக்க வேண்டும். ஒரு பக்கம் நீதிமன்றில் வழக்குகளும் போய்க் கொண்டிருந்தன. அச்சமயத்தில்தான் கண்ணாடிக் கலைக்குழு உருவானது. கிட்டத்தட்ட தமிழில் இன்று திருநங்கையர் பங்கேற்கும் அரங்க செயற்பாடுகள் அதில் இருந்துதான் ஆரம்பமானது என்று சொல்ல முடியும். இன்று இது நல்லதொரு வளர்ச்சியைக் கண்டுள்ளது. இந்த அடிப்படையில் திருநங்கை ரேவதியின் வாழ்க்கைச் சரித்திர நூலான 'வெள்ளை மொழியை' அவரே தமிழில் 45 நிமிடங்களில் நடிப்பதைக் குறிப்பிடலாம்."

"இன்றைக்கு இந்தியாவில் பெரிய சிக்கல். CIA என்று சொல்கின்ற குடிமக்கள் உரிமை யாருக்கெல்லாம் உரியது என்று தீர்மானிக்கின்ற சிக்கல். அதனால் மக்கள் போராட்டம் முகிழ்த்தது.

குறிப்பாக இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவர்களை மிகவும் பாதிக்கக் கூடிய விடயங்களை இன்று இருக்கக் கூடிய வலதுசாரி அரசாங்கம் செய்யத் தொடங்கியது. இதற்கெதிரான போராட்டம் முதலில் டெல்லியில் ஆரம்பமானது. ஷாஹின்பாக் என்ற இடத்தில் பெண்கள்தான் போராட்டத்தை முன்னெடுத்து சென்றார்கள். பெண்கள் போராட வந்துவிட்டார்கள் என்றால் இவர்கள் பிள்ளைகளை எங்கே விடுவது? பிள்ளைகளை பார்ப்பதற்கு, படிக்கும் பிள்ளைகள் படிப்பதற்கு, பிள்ளைகளை உற்சாகப்படுத்துவதற்கு கூடாரத்திலேயே ஒரு பகுதி நூலகமாக ஒதுக்கப்பட்டது. அடுத்து வீட்டில் இருப்பவர்களுக்கான சாப்பாடு? ஆகவே பொதுவில் சமையல் செய்யப்பட்டது. இந்தியாவின் எல்லா மாவட்டங்களிலும் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் வந்தவர்கள் எல்லோரும் இப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள். வாய்ப்பு இருக்கும்போது அனைவரும் டெல்லிக்கு வந்து போராட்டத்தில் பங்கெடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2000ம் ஆண்டில் மார்ச் 8 பெண்கள் தினத்தை மாயாராவ் எனும் நாடகக் கலைஞரோடு சேர்ந்து ஷாஹின்பாக்கில் பங்கேற்றது, உண்மையில் எனக்குக் கிடைத்த மிகப்பெரிய சக்தி. அவர் 2012 இல் நடந்த "நிர்பயா" வழக்கு (பாலியல் வன்புணர்வு, சித்திரவதை செய்யப்பட்டு கொலையுண்ட பெண்) தொடர்பாக "வாக்" என்னும் ஒரு நிகழ்ச்சியைச் செய்தவர். அவர் பெண்களோடு தொடர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தார். இஸ்லாமிய மக்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதற்கு எதிரான விடயங்களில் எல்லாம் கலந்து கொண்டிருந்தார்.

அடுத்து விவசாயிகள் டெல்லியை முற்றுகையிட்டு போராட்டம் நடத்திய போதும் அங்கும் போய் நின்றார். இது மகிழ்ச்சியான விடயம் என்பதற்கு அப்பால் உள்ளார்ந்த ஆற்றல் மிக்க, வலுவைக் கொடுக்கக்கூடிய விடயமாக அமைந்தது. இச் சமயத்தில்தான் 'பார்ப்போமே'(ஹம் தேகேங்கே) என்ற பாடல் இந்தியா முழுவதும் அனைத்து மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டது. இப் பாடல் பாகிஸ்தானிய சர்வாதிகாரத்திற்கு எதிராக உருது மொழியில் 'ஃபயஸ் அகமட் ஃபயஸ்' என்பவர் எழுதியது. வடஇந்தியாவில் இருப்பவர்களில் அதிகம் பேருக்கு அப்பாடல் தெரியும். அந்தப் பாடல் எல்லா இடங்களிலும் எல்லா மொழிகளிலும் பாடுகின்ற நிலை வந்தது. தமிழில் பொன்னியும் நானும் அதை மொழிபெயர்த்தோம். இப்பாடலை லண்டனில் 'கோத்தா கோ கம' ஆர்ப்பாட்டம் நடக்கும்போது நிர்மலா பாடினார். கொழும்பில் நிறையபேர் பாடினார்கள். மட்டக்களப்பில் அதிகம் பேர் இன்னம் பாடிக்கொண்டுள்ளார்கள். எல்லையற்ற சமுதாய நீதியைக் கனவு காண்பதற்கு இவ்வாறு கலைகள் கை கொடுக்கின்றன."

"ரோகித் வெமுலா' என்ற தலித் ஆய்வு மாணவர் தூக்கிட்டு தற்கொலையால் மறைந்த வேளை அவர் எழுதி வைத்த கடைசி கடிதத்தை வைத்து ஒரு நாடகமாக செய்தார்கள். எரிகின்ற களத்தில் நின்று என்ன செய்வது என்று எல்லோரும் திகைத்து நிற்கின்ற வேளையில், எல்லாருக்கும் எட்டுவது போன்று ஏதாவது செய்ய வேண்டும் என்றால் அது கலையால்தான் முடியும் என நினைக்கின்றேன்."

"கடந்த கொரோனா கால இரண்டு வருட லொக் டவுன் நேரத்தில்கூட நமக்கு என்ன செய்வது என்று தெரியாமலே இருந்தது. இந்தியாவில் லொக்டவுன் நேரத்தில் புலம்பெயர் தொழிலாளிகள் வேலைக்காகச் சென்ற மாநிலத்தில் இருந்து தத்தம் மாநிலத்திற்கு நடந்து போனார்கள். எனினும் ஆட்சியாளர்கள் எந்தவித அக்கறையும் இல்லாதிருந்தார்கள். அந்தப் பேரிடர் சூழ்நிலையிலும் பாலியல் வன்முறை, குடும்ப வன்முறை நடந்தது. நான் நெருக்கமாக வேலை செய்யும் "க்வியர்" சமூகத்தைச் சேர்ந்தவர்களில் அதிகம் பேருக்கு வீடுதான் சிறை. ஆனால் 'வீட்டுக்குள்ள இருங்க, அது உங்களுக்கு பாதுகாப்பு' என்று சொல்லும் போது பெரியதொரு சிக்கல் வருகிறது. இதை எல்லாம் வைத்துக்கொண்டுதான் 'சிரிப்புதான் வருது' எனும் நாடகம் ஒன்லைன் மூலம் செய்தோம். எனக்கு இந்த இணையம் எல்லாம் ரொம்ப சிரமமான விடயம். நான் வேறு ஒரு தலைமுறையைச் சேர்ந்தவள். எனக்கு அதில் பழக்கமே இல்லை. எனினும் காலச் சூழல் எம்மை பழக்கப்படுத்துகிறது."

"நான் நினைக்கிறேன் இம் மாதிரியான நெருக்கடிகள் எமக்கு வந்து மூச்சு முட்டும் பொழுதுகளில் நாம் இயங்க முடியும், இயங்கி கொண்டிருக்கிறோம் என்று சொல்வதற்கு கலைகள் மட்டும்தான் நம்மிடம் உள்ளது. இது ஒரு ஆறுதல். மக்களை உட்கார வைத்து அவர்களிடம் பகிர்ந்து கொள்வதற்கு கலைதான் ஒரு வடிவமாக உள்ளது. நேரடி அரசியல் தளங்கள் எல்லாம் செயற்பாடுகள் இல்லாமல் போகின்ற போதுகூட ஆட்டமும் பாட்டும் ஓவியமும் அரங்கமும்தான் நின்று பிடிக்கின்றன. இன்று இலங்கையில் நிலவும் இந்த நெருக்கடியான சூழலைக் கேள்வி கேட்குமுகமாக பெண்கள் தினமும் காலையில் மட்டக்களப்பின் காந்தி சிலைவரை நடக்கின்றனர். இந்த நடையுடன் பயணிக்கையில், 1998 இல் உருவான நாடகங்களான 'நிசப்த இரைச்சல்', 'மட்டுநகர் கண்ணகைகள்' செய்யும்போது இருந்த அதே மனநிலைக்கு இந்த நடை என்னை இட்டுச் செல்கிறது. அதனால்தான் ஏதாவது செய்ய வேண்டும் என்ற வேகம் வந்தது. இதுவரை செய்த நாடகங்கள் எல்லாம் எல்லோருடனும் பகிர்ந்து பேசி நாடகங்களாக வெளிவந்தன. 'காவலம்மா', 'ஒருபிடி அன்பு' இவற்றை செய்கையில் ஏற்கனவே இருந்த சிக்கல்களை அவதானித்து அதன் பின் திட்டமிட்டு நாடகத்தைச் செய்தோம்.

ஆனால் இம் முறை இந்த நடையில் கலந்து கொண்ட அனுபவம்தான் இந்த நாடகத்தின் வித்து. ஏதாவது செய்யாது போயிருந்தால் எனது மண்டை என்னை குடைந்தெடுத்திருக்கும். பலர் என்னிடம் சொல்வார்கள் 'நீங்க தொடர்ந்து சமூகத்தோட வேலை செய்கிறீங்க அது எப்படி உங்களால் முடியுது' என்று. இதுதான் நமது வாழ்க்கை முறையியல். நம்மைச் சுற்றி இப்படி எல்லாம் நடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கையில் எதுவும் செய்யாமல் இருந்தால் தூக்கம் வராது. சொல்வாங்க இல்ல: 'மரம் சும்மா இருக்க விரும்பினாலும் காற்று சும்மா இருக்க விடாது' என்று. அதுதான் உண்மை."

"இன்று அரசியல் ஒடுக்குமுறை என்பது போராட்டத் திற்கு எதிரான ஒடுக்குமுறை என விரிந்து கொண்டே செல்கிறது. எனினும் போராட்டத்தின் பொருண்மை கலைகளுக்கூடாக நடைபெறுகின்றன. கூடுதலாக இணைய தொழில்நுட்ப முறைகளுக் கூடாக பல கலை முன்னெடுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

'நான் நினைக்கிறேன் கொழும்பில் காலிமுகத்திடலில் நடந்த போராட்டத்தில் கலைஞர் களுக்கு கனிச மான பங்கு இருந்தது. கடைசி கட்டத்தில் போராட் டத்திற்கெதிரான வன்முறை நடக்கும்வரை கலைஞர் களின் பங்கு இருந்தது. பல்வேறு இடங்களில் பாடல்கள் ஆடல்கள் நடந்தன. மட்டக்களப்பில் இருந்து சென்றவர்கள் ஒப்பாரி வைத்து பாடுவது, காணாமல் போன பத்திரிகையாளர் 'எக்னலிகொட' அவர்கள் மனைவி 'சந்தியா எக்னலிகொட' 'இந்த கோத்தாவிடம் நியாயம் கேட்க முடியாது நான் கடவுளிடம் கேட்கிறேன்' என்று தனது முடியை காளிகோயிலில் வைத்து வெட்டியது, சித்திரசேனாவின் மகள் ஆடியது… இவ்வாறு கலைஞர்களின் பங்கு இருந்து கொண்டே இருக்கும்.

தமிழ் நாட்டில் இருந்து கலைஞர் "அறிவு" இலங்கை குழுவோட சேர்ந்து "ரப்" பாடல் ஒன்று பாடியதும் எனக்கு ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது. போராட்ட களத்தில் அத்தனைபேரும் இணைந்து முள்ளிவாய்க்கால் தினத்தை நினைவுகூர்ந்தது மிகவும் மனதைத் தொட்ட விடயம். ஏனென்றால் இவ்வாறு இதுவரை நடக்கவே இல்லை. அன்றைய தினம் பாராளுமன்றத்திலும் அமைதியாக இத்தினம் நினைவுகூரப்பட்டது."

"கலைக்குழுக்களில் பணியாற்றுபவர் களுக்கு தானாகவே பொறுப்பு வர வேண்டும். 'என்ன நாம இப்படியே இருக்கிறம்' என்று கண் மூட விடாத ஒரு தொந்தரவு உள்ளார வரணும். ஒவ்வொரு தடைவையும் யாரோ ஒருவர் பூனைக்கு மணிகட்டுவார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பது சாத்தியம் கிடையாது. நியாயக் கிராமத்தின் 101வது நாளுக்கு எல்லாரும் சேர்ந்து செய்த அந்தக் கலை வேலைப்பாடுகளும் (Art Work) அதுதான். இதமாதிரி ஒவ்வொருவரும் தங்களுக்கு பிடித்ததை செய்தா அதன் மதிப்பும் தரமும் வேறுதானே!

இவ்வளவு தலை நரைச்ச பிறகும் நான் இப்படி யோசிக்கிறேன் என்றால், 'ஏன் செய்யல்ல ஏன் செய்யல்ல' என்று நாம நினைக்கின்ற மாதிரி நினைக்க ஒரு பத்து பதினைந்து பேர் இருப்பாங்க என்று நான் நம்புறன். அதற்கான சூழல் வரும்போது கட்டாயமாக அது எங்கையோ பத்தும். எதாவது எப்படியாவது செய்ய வேண்டும் எனும் வேகம் எப்படி முக்கியமோ அதே மாதிரி எதுவுமே செய்ய முடியாது என்ற இயலாமையும் பயமும் ஆதங்கமும் ரொம்ப நிஜம். அந்தக் கணம் முக்கியம். ஏதாவது செய்ய முடியாமல் போய்விடுமோ இன்னும் சூழல் மோசமாயிருமோ எனும் கணங்கள் ரொம்ப பயங்கரம். இன்னொன்று மக்கள் வறுமை. தாங்கள் சாப்பிடும்போது ஒருவர் 'ஒரு வாய் சாப்பாடு தருவீங்களா' என்று கேட்டதாக இலங்கேசும் அரியமலரும் சொன்னாங்க. சனங்களுக்கு அப்படி ஒரு வேளை சாப்பாடு கிடைக்காமல் போகும் என்றால் அதை கற்பனை பண்ணவே முடியல்ல"

"மற்றது போராட்டம் சார்ந்து கலைஞர்களின் பங்கு எப்போதும் இருந்து கொண்டிருக்கும். ஏதோ ஒரு வகையில் அவர்கள் பங்களிப்புக்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்படும். இனி வரும் காலத்தில் இதற்கான தேடல்கள் மீண்டும் தொடங்கும்போது நாம் தடயங்களை விட்டு விட்டு போகாதவர்களாக இருக்கக் கூடாது.

நீங்க அமைதியான நடை நடக்கிறீங்க. சில நாட்கள் மூன்று பேர் மட்டும் நடந்தது இருக்கு. நாற்பது பேர் நடந்த நாட்களும் இருக்கு. அனைவரும் ஒவ்வொரு நாளும் வரமுடியாத சூழல் காணப்படுவதற்கான நடைமுறை சிக்கல்களும் உள்ளது என்பதை நான் புரிஞ்சிக்கிறன், நீங்க தெரிவு செய்த இந்த முறைமையானது ரொம்ப அழகா இருக்கு. அந்தத் தேடலையும் பொதுவெளியில் நியாயத்திற்காக கனவு காணுகின்ற ஒரு வடிவத்தையும் ஒன்றாக இணைச்சிருக்கீங்க.

இந்த அமைதி நடையில் கோசம் போடுவது வந்திருந்தால் இந்த நடை இவ்வளவு காலத்துக்கு போயிருக்குமா என்று சொல்ல முடியாது. ஒவ்வொருத்தரும் சொல்லும் சின்ன சின்ன விடயங்கள் எல்லாம் இருக்குத்தானே… ஐஸ்கீறிம் விற்பவர் நம்மகிட்ட வந்து கதைப்பதில் இருந்து அந்த பாட்டி கை ஆட்டுவது தொடக்கம். இவையெல்லாம் சமயச் சார்பற்ற சடங்கு போல ஆட்களை ஒன்றிணைக்கிற சடங்கு. அதே சமயம் உங்களையும் நீங்கள் இழக்காமல் நீங்கள் நீங்களாகவும் இருக்கலாம், மற்றவர்களுடன் இணைந்தும் இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை இரண்டையும் சேர்த்தெடுப்பதுதான் இந்த நடையோட மிகப்பெரிய பலம் என நான் நினைக்கின்றேன். தினம் தினம் ஏதேதோ காரணங்களுக்காக எழுந்திருக்கிறோம். வேலைக்கு போக வேண்டும், பிள்ளைக்கு சாப்பாடு கொடுக்க வேண்டும்.... இப்படி ஏதேதோ... நான் நடக்க போக வேண்டும் என்று எழுத்திருக்கிறேன். வாழ்க்கையில் ஏதோ ஒரு பிடிப்பாக இந்த நடை எனக்கு இருக்கிறது. அதைத் தவிர கூடுதலாக நடையில் மெதுவாக நடக்கிறது. எனது வைத்தியர் சொல்லியுள்ளார், கையில் எதுவுமே இல்லாமல் 10 நிமிடம் என்றாலும் நடக்க வேண்டும் என்று. இங்கு நான் தொடர்ச்சியாக இருபது நாள் ஒவ்வொரு நாளும் 40 நிமிடம் வரை நடந்து சென்றுள்ளேன்.

ஆரம்பத்தில் மெதுவாக நடக்கும்போது மனதை எல்லா நேரமும் லேசாக்க முடியல்ல. சிக்கல்களை கிளறி விட்டதுபோல் மண்டைக்குள் கஷ்டமாக இருந்தது. முதல் இரண்டு நாள் சரியா கஷ்டப்பட்டேன். ஆனா நிதானப்பட்டு பழகிய பின்னர் இது எங்களுக்குள் ஒரு நடுநிலைமையை கொண்டு வரக்கூடியதாகக் காணப்பட்டது, வண்டிலுக்கு அச்சாணி மாதிரி எங்களை வழிநடத்துவதாக உள்ளது. எங்களுக்குள் ஒரு வகையான ஈர்ப்பாகவும் இது காணப்படுகின்றது. அதிகமாக பெண்கள் நடக்கிறோம். ஒன்றோ இரண்டு ஆண்களும் நடக்கின்றார்கள். அதிலும் முஸ்லிம் தோழி ஒருவர் நடப்பது, மௌனமாக நடப்பது... புதிய வரலாறு என்றுதான் நான் சொல்வேன். இந்த நடை எவ்வளவு காலம் நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. மழை வந்தாலும் வெயில் வந்தாலும் நடக்கிறோம். நடப்பதற்கான உறுதி எம்மிடம் உள்ளது என்பதை அது எங்களுக்கு உறுதிப்படுத்துகின்றது.

நான் பல வருடங்களாக இங்கு வந்துபோய்க் கொண்டிருக்கிறேன். ஆனால் இப்படி ஒவ்வொரு வரையும் ஒவ்வொருநாளும் பார்ப்பது இந்த நடையினால்தான். அது முக்கியம் என நினைக்கிறேன்.

இந்த நடையில் கோரிக்கைகள் உள்ளன. நியாயமான கனவுகள் உள்ளன. ஆனால் நாங்கள் யாரையும் இதில் திட்டவில்லை. நியாயமான பாராளுமன்றம் வேண்டும் என்பதும் தற்போதுள்ள அமைச்சர்கள் வேண்டாம் என்பதும் ஒவ்வொருவருடைய மனதிலும் உள்ளது.

எதிர்ப்பின் அடிப்படையில் கட்டப்பட்ட விடயமாக இது இல்லை. ஆற்றாமை இருக்கலாம். ஆனால் வெறுப்பு இல்லை."





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடல்

பார்ப்போமே, நாம் பார்ப்போமே
உள் மனம் அறியும்
பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
விடியலாய் மலரும்
அந்நாள் அதனை
நாம் பார்ப்போமே,
அதை நாம் பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
ஆதி எழுத்தின் வாக்குறுதி
நாம் பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
மலையாய் நசுக்கும்
அதிகாரம்
தூசாய் பஞ்சாய் பறந்திடுமே
அதை பார்ப்போமே,
நாம் பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
ஒடுக்க பட்டோர்
நம் நடை அதிர்வில்
இவ்வையம்
தடதடென்றதிர்ந்திடுமே
ஆள்வோர்களின்
தலையாவும்
இடி மின்னல் தாக்கி
வீழ்ந்திடுமே
நாம் பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
உள்ளூர இறையை
உணர்ந்து விட்டால்
இனி பிரிவும்
வெறுப்பும் கரைந்திடுமே
ஒன்றாய் நிற்க
அனுமதியற்ற நாம்
அன்பின் முற்றம் சேர்வோமே
மணிமுடி எல்லாம்
வீழ்த்தப்படும்
சிம்மாசனம் அனைத்தும்
சிதறிடுமே
அதை பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
ஆண்டவன் பெயரே
நிலைத்திருக்கும்
அது மறைந்திருக்கும்
எங்கும் நிறைந்திருக்கும்
காட்சியும் அதுவே
காண்பதுவும்
உள் ஒளியின்
உன்மை முழக்கம் ஆகும்
அது உன்னுள்ளே என்னுள்ளே
படைப்புயிர் எல்லாம்
எழுந்து நிற்கும்
அதில் நீயும்தான்
நானும் தான்
பார்ப்போமே,
நாம் பார்ப்போமே
நாம் பார்ப்போமே

உருது மொழியில் இருந்து மொழிபெயர்ப்பு -
**மங்கை, வரன்னி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பெண்ணிலைவாதம் என்பது அனைவருக்கும் உள்ளது, நாம் அனைவரும் பெண்ணிலைவாதிகளாக இருக்க வேண்டும்."

பெண்ணிலைவாதம் என்பது மேற்கத்திய நாடுகளில் இருந்து வந்த கருத்தியல் அல்ல, மாறாக அது காலங்காலமாக பல்வேறு வர்க்கங்கள் மற்றும் சமூகங்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தியல் ஆகும் .

பெண்ணிலைவாதத்தின் பொதுவான வரையறை பெண்களுக்கு சமமான சமூக, அரசியல், பொருளாதார உரிமைகள் மற்றும் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்பதாகும். பெண்ணிலைவாதத்தின் நோக்கம் ஒரு பாலினத்திடம் இருந்து அதிகாரத்தைப் பறித்து இன்னொரு பாலினத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்பது அல்ல. பெண்ணிலைவாதத்தின் ஒரு பொருள் என்னவென்றால், ஒரு பெண் என்ன செய்ய விரும்புகிறாள், அவள் வாழ்க்கையில் என்னவாக இருக்க விரும்புகிறாள், அதையெல்லாம் செய்வதற்கான சுதந்திரம் அவளுக்கு இருக்க வேண்டும் என்பதேயாகும் . பெண்ணிலைவாதம் என்பது பெண் வெறுப்பு மற்றும் பெண்கள் மீதான சுரண்டலுக்கு எதிரான இயக்கம். இது பெண்களுக்கு சமத்துவத்தை அடைவது மட்டுமல்ல. பெண்ணிலைவாதம் அனைவருக்கும் சமத்துவத்தை நாடுகிறது. இது ஒரு பாலினத்திற்கு மட்டும் மட்டுப் படுத்தப்படாமல், அனைத்து மதங்கள், வகுப்புகள், ஜாதி மக்கள் மத்தியில் சமத்துவத்தைக் கோருகிறது.

பெண்ணிலைவாதம் ஒவ்வொரு தனி மனிதனும், சுதந்திரம், சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் வாழ்வதற்கான உரிமையைக் கோருகிறது. ஆனால் இன்றும இது ஒரு சர்ச்சைக் குரிய விஷயமாகவே பார்க்கப்படுகிறது என்பதே உண்மையாகும். அதனால்தான் இன்றும் பலர் தங்களை பெண்ணிலைவாதம் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறார்கள். சிலருக்கு பெண் ணிலைவாதம் என்பது சமூகத்தைக் கெடுக்கும் பெண்களுக்குக் கொடுக்கப்படும் அவதூறு போன்றது. பெண்ணிலைவாதிகள் பெண்கள் மட்டுமே என்று நினைப்பதால் இந்த ஆணாதிக்கச் சமூகம் இந்த அத்துமீறல்களை பெண்களுக்கு மட்டுமே ஏற்றதாகக் கருதுகிறது.

ஆணாதிக்கம் பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் தீங்கு விளைவிக்கும் என்பதால் ஆணாதிக்கத்தை வேரறுப்பதே பெண்ணிலைவாத இயக்கத்தின் நோக்கமாகும். ஊதாரணமாக- ஒரு ஆண் தன் வருத்தத்தை பொதுவெளியில் அழுது வெளிப்படுத்தும் போது, ஏன் பெண்களைப் போல அழுகிறாய்? என்று அவமானப்படுத்தப்படுகிறான், பெண்களை விட ஆண்கள் அதிக பணம் சம்பாதிக்க வேண்டிய அழுத்தத்தில் உள்ளனர். சமூகத்தால் ஒதுக்கப்பட்ட பாலின பாத்திரங்களால் ஆண்களும் பெண்களும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இந்த ஆணாதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதே பெண்ணிலைவாதத்தின் நோக்கம். இதன் எளிய நோக்கம், ஆண், பெண் இருபாலருக்கும் சம உரிமையை வலியுறுத்துவதாகும். பெண்ணிலைவாதம் சமத்துவத்தில் கவனம் செலுத்துகிறது, பெண் மேலாதிக்கம் அல்ல. பெண்ணிலைவாதத்தின் நோக்கம் ஆண்களை இழிவுபடுத்துவதும், புறக்கணிப்பதும் அல்ல.

பெண்ணிலைவாதம் ஆணாக இருப்பதை விட பெண்ணாக இருப்பது பெரியது அல்லது சிறந்தது என்று நம்பவே இல்லை. பெண்ணிலைவாதத்தின் நோக்கம் ஆண்களை இழிவுபடுத்துவதும், புறக் கணிப்பதும் அல்ல.

பெண்ணிலைவாதம் பாலின சமத்துவத்தை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆண் மற்றும் பெண்களின் உயிரியல் அமைப்புக்கும், ஆண்மை மற்றும் பெண்மையின் குணாதிசயங்களுக்கும் இடையே நேரடி தொடர்பு அவசியமில்லை என்று பெண்ணிலை வாதிகள் வாதிடுகின்றனர். குழந்தைப் பருவத்தில் வளர்க்கப்பட்ட காலத்திலிருந்தே, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே உள்ள சில வேறுபாடுகளின் அடித்தளங்கள் அமைக்க முயற்சிக்கப்படுகின்றன, அவை பராமரிக்கப்படுகின்றன. இந்த பாலின அடிப்படை யிலான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதும் இதன் நோக்கமாகும்.

பல நூற்றாண்டுகளாக சமூகத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு உள்ளது. சிறந்த தத்துவஞானி அரிஸ்டாட்டில் பெண்களின் குடியுரிமைக்கு எதிரானவர். பல நூற்றாண்டுகளாக, பெண்கள் ஒடுக்கப்பட்டு, அவர்களின் உரிமைகள் புறக்கணிக்கப்பட்டன. அவர்கள் சமூகத்தின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளாகக் கருதப்பட்டனர் மற்றும் அவர்களின் பங்கு வீட்டு வேலைகள், குழந்தை பிறப்பு மற்றும் வளர்ப்பு ஆகியவற்றில் மட்டுப்படுத்தப்பட்டது.

பெண்ணிலைவாத எழுத்தாளரான "சிமோன் டி புவா" இந்த சூழலில் எழுதினார், "ஒருவர் பெண்ணாகப் பிறக்கவில்லை, ஒரு பெண்ணாக ஆக்கப்படுகிறார்". யார் வேலை செய்வது, யார் உணவு சமைப்பது என்று இயற்கையால் சொல்லப்படவில்லை. அதே நேரத்தில், இந்தியாவின் பிரபல பெண்ணிலைவாதியான "கமலா பாசின் கூறுகிறார். ஒரு பெண்ணிலைவாதியாக இருப்பதன் அர்த்தம், நீங்கள் யார் என்பதை நீங்கள் மாற்ற வேண்டும் என்று அர்த்தமல்லவா? நீங்கள் எப்படி உடுத்துகிறீர்கள் அல்லது எவ்வளவு மேக்கப் போடுகிறீர்கள்? பெண்ணிலைவாதம் என்பது பெண்களுக்கு மட்டுமல்ல, எந்த ஆணும் பெண்ணிலைவாதியாக இருக்கலாம். பெண்ணிலைவாதி என்பது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்று நம்புபவர். இது பெண்களுக்கு மட்டும் அல்ல ஆண்களுக்கும் இழைக்கப்படும் அநீதிகளுக்காக குரல் எழுப்புகிறது.

பெண்ணிலைவாதிகள் மதத்திற்கு எதிரானவர்கள் என்றும் பலர் நம்புகிறார்கள். பெண்கள் சமத்துவம் பற்றி பேசினால், மதம் மற்றும் கலாச்சாரத்திற்கு எதிரானவர்கள் அல்ல. அதே நேரத்தில், பெண்ணிலைவாதிகள் குடும்பங்களை உடைப்பதாகவும் பலர் நம்புகிறார்கள். ஆனால் அவர்கள் குடும்பங்களுக்கு இடையே சமத்துவ அந்தஸ்தை விரும்புகிறார்கள்.

பெண்ணிலைவாத சித்தாந்தம் மேற்கத்திய கலாச்சாரத்தின் விளைபொருள் என்றும் பலர் நம்புகின்றனர். பெண்ணிலைவாதம் என்பது மேற்கத்திய நாடுகளில் இருந்து வந்த கருத்தியல் அல்ல, மாறாக அது காலங்காலமாக பல்வேறு வகுப்பினராலும் சமூகங்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்தியல். இது அனைவருக்கும் பொதுவானது, நாம் அனைவரும் பெண்ணிலைவாதிகளாக இருக்க வேண்டும். மற்ற பெண்களுக்கு தவறு செய்யும் பெண்களும் இருக்கிறார்கள், மற்ற பெண்களுக்கு நல்லது செய்யும் ஆண்களும் இருக்கிறார்கள். பிரச்சனை மனிதனாக இருப்பதில் இல்லை, சிந்தனையில் உள்ளது.

**ரியா யாதவ்**

மொழி பெயர்ப்பு : M. Z. F. இல்மா

**தேங்காயின் விலை அதிகரிக்காதது போல**
**எங்களது பிரச்சனைகளும்**
**அப்படியேதான் இருக்கின்றன**
**நாங்கள் அனைவரும்**
**ஒரு குலைத் தேங்காய்களாய் இருந்தோம்**
**ஆனால் இப்போது தனித்தனியே**
**உலகம் எங்களை பிரித்துக் கொண்டது**
**எனது**
**சகோதரன் வீட்டில்**
**இரண்டு குலை கட்டிய**
**தென்னை மரங்கள்**
**ஆய்வாரின்றி**
**பேயாட்டம் போடுகின்றன**
**எனது சகோதரிகள் தென்னைகளை**
**வெட்டி விட்டு வீடு கட்டி வாழ்கின்றனர்**
**அவர்களுக்கு இப்போது**
**அவர்கள் கணவன்மார்கள்**
**பக்கட் பால் ஒவ்வொரு நாளும்**
**வாங்கிக் கொடுக்கின்றனர்.**

**வாசுகி குணரட்ணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயர்ச்சியாகுமே பெரு மகிழ்ச்சியாகுமே.

ஊர்கள் எல்லாம் வளங்கள்
நல்லாய் நிறைந்து கிடக்கிது
உழைக்கும் மக்கள் கரங்கள்
எல்லோ ஓய்ந்து கிடக்கிது

உழைத்து வாழும் வாழ்க்கை
எங்கோ பறந்து போச்சுது
உழைத்து மகிழும் வாழ்க்கை
இங்கே மறந்து போச்சுது

வாங்கி மகிழும் வாழ்க்கை
இங்கே மலிந்து கிடக்கிது
இடைத்தரகர்கள் வேலை எல்லோ
தொழிலும் ஆச்சுது

வெட்டித்தனம் பொழுது போக்கின்
அர்த்தம் ஆச்சுது
சுட்டித்தனம் சிறுவர்களை
விட்டும் போச்சுது

கெட்டித்தனங்கள் கொட்டிக் கிடக்கும்
மனிதராகுவோம் மாண்பு கொள்ளுவோம்
இயற்கையுடன் இணைந்து வாழும்
வழிகள் காணுவோம் - இணைந்து
வாழ்க்கை ஆக்குவோம்

போட்டியற்ற பகைமையற்ற
வாழ்க்கை ஈட்டுவோம்
பங்கும் பகிர்வும் கொண்ட
மனிதப் பண்பு காட்டுவோம்

உழைத்து வாழும் கரங்கள்
இங்கே நிறைந்து கிடக்கிது
நாளும் அவை வாழ்வை
நன்றாய் இயக்கி வருகிது

வளங்கள் எல்லாம் விளைச்சல்
ஆக்கும் திறன்கள் இருக்கிது
வாழ்வை நன்றாய் மாற்றி
அமைக்கும் அறமும் இருக்கிது

சிற்றெறும்புக் கூட்டம் போல
வல்ல முயற்சி இருக்கிது
சிறுதுளிகள் பெருவெள்ளம்
எல்லாம் உண்மை தானது

தங்கி வாழ்தல் அற்ற வாழ்க்கை
வாழ முடியுமே
பகிரும் வாழ்க்கை எல்லோருக்கும்
உயர்ச்சியாகுமே பெரு மகிழ்ச்சியாகுமே

## மீண்டும் எழும்ப வாழ்வோமோ?!
## மீளாத் துயரில் வீழ்வோமோ?!

உழைக்கும் மக்கள் வாழும் நாட்டில்
கடனும் சூழ்ந்து வந்ததேன்
வாழும் வளங்கள் நிறைந்த நாட்டில்
பட்டினிப் பஞ்சப் பீதியேன்

கடல் சூழ்ந்து இருக்கும் நாட்டில்
கடனும் சூழ்ந்து வந்ததேன்
படித்த மனிதர் பெருத்த நாட்டில்
பட்டினிப் பஞ்சப் பீதியேன்


இப்படி நிலைமை எப்படி எமக்கு?
நேர்ந்ததை அறியும் வல்லவர் நாம்
அறிந்து தெளிந்து எழுந்து கொண்டால்
காலம் எங்கள் கைகளில்
வாழ்வும் எங்கள் கைகளில்

பூதம் மறைத்த புதையல் கதை
எமது வாழ்வில் வந்ததேன்
இதையும் கதையாய் கேட்டுத் திரியும்
சிறிய மனிதராவோமோ?!
காரணம் அறிந்து காரியம் புரியும்
பெரிய மனிதராவோமோ?!

சிறிய பூதங்கள் பெரிய பூதங்கள்
உலகைச் சுருட்டும் காலமிதில்
முழிப்பில் நித்திரை கொள்ள வைக்கும்
மாய உலகில் வாழும் நாம்
மீண்டும் எழும்ப வாழ்வோமோ?!
மீளாத் துயரில் வீழ்வோமோ?!

**கவிதைகள்**
**சி.ஜெயசங்கர்**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# "நன்நிலம்"

## - அனுபவப் பதிவுகள் -

2021 ஆம் ஆண்டுக்கான நூறுகோடி மக்களின் எழுச்சியானது பெண்களுக்கும் பூமித் தாய்க்கும் எதிரான வன்முறைகள் அற்ற வாழ்தலைக் கொண்டாடுவோம்! எழுச்சி கொள்வோம்! மரபு ரீதியான உணவுகளை நஞ்சற்ற முறைகளில் உற்பத்தி செய்வோம்! தோட்டங்கள் செய்வோம்! உடல் உள வலுமிக்கவர்களாய் நோய்களின் அச்சம் அற்றவர்களாய் வாழ்வோம்! என்ற தொனிப்பொருளில் அமைந்தது. கொரோணாக் காலச் சூழலிலும் எமது பாரம்பரிய விதைகளைத் தேடிப் பல இயற்கை விவசாய உற்பத்தியாளர்கள் மற்றும் பாரம்பரிய மூலிகைகள், கிழங்கு வகைகள் சார்ந்து அறிவுடைய பலரையும் நண்பர் களுடன் சேர்ந்து வந்தாறுமூலை, மண்டூர், குமாரபுரம், கோடைமேடு, ஊறணி போன்ற இடங்களில் சந்தித்தேன். சில பாரம்பரிய நாட்டு விதைவகைகளையும் பெற்றுக்கொண்டேன்.

இவ்வாறாக சந்தித்தவர்களின் அனுபவப் பகிர்வுகள் மற்றும் பல ஆலோசனைகள் எனக்கு இத்தகைய செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட உற்சாகத்தைத் தந்தன. கொரோணாத் தொற்றுக் காலங்களில் வீட்டில் இருந்து வேலை செய்யும் சந்தர்ப்பமும் மகனும் பாடசாலை செல்ல முடியாது வீட்டிலே இருந்த காரணத்தினாலும் என்னால் சில பயிர்களை(மிளகாய், அவரை, சுரக்காய், தும்பங்காய், பாகற்காய்) இயற்கைப் பசளையை மட்டுமே பாவித்து வீட்டிலே உற்பத்தி செய்து பயன் பெறமுடிந்தது. எனக்கு முழு உற்சாகத்தையும் ஆதரவினையும் எனது நண்பர்களும் குடும்பத்தாரும் செய்திருந்தனர். எனக்கு பாடசாலைக் காலத்திலிருந்து மூலிகை மரங்கள் சார்ந்தும் அதன் பயன்கள் சார்ந்தும் ஆர்வம் இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது எனது உயர்தரத்திற்கான தனிச் செயற்திட்டத்திற்காக மூலிகை மரங்களை காயவைத்து ஒட்டி அதன் பயன்களையும் எழுதி சமர்ப்பித்திருந்தேன். பின்னர் வீட்டில் காய்ந்த மிளகாய் விதைகளை போட்டு மரங்களை உருவாக்கியுமிருந்திருக்கின்றேன். ஆனால் முழுமையான ஈடுபாடு இருக்கவில்லை. எனினும் 2020ஆம் ஆண்டு நூறுகோடி மக்களின் எழுச்சி செயல்வாதமானது என்னை முழு ஈடுபாட்டுடன் செயற்படக் காரணமாயிருந்தது.

இன்று நமது சமூகத்தில் பலரும் பல நோய்களால் அல்லல்பட்டுக்கொண்டிருக்கின்றனர். பல பெரிய பெரிய தனியார் வைத்தியசாலைகள் நோயாளிகளால் நிரம்பி வழிகின்றன. எமது பாரம்பரிய வைத்தியத்தினையும், உணவினையே மருந்தாக உட்கொண்ட காலங்களையும் மறந்து, இல்லாதொழித்து நோயாளர்களாய் இருக்கிறோம். ஒரு சமூகப்பொறுப்புடன் உள்ளூர் உற்பத்திகள் சார்ந்து செயற்படும் மூன்றாவது கண் நண்பர்கள் குழுவில் ஒருவராயிருப்பதனாலும் இயற்கையின் ஒரு பகுதியாகவேதான் மனிதர்கள் இருக்கிறோம் என்பதான விடையங்கள் சார்ந்து சிந்திக்க செயற்பட ஆசைகொண்டு அதையே என் வாழ்வில் ஒரு பகுதியாக ஆக்கிக்கொள்ளவும் எண்ணினேன். அந்தவகையில் நான் பல மூலிகை மரங்களைத் தேடினேன். சந்தர்ப்பம் கிடைக்கும் வேளைகளில் பல பாரம்பரிய வைத்தியர்களுடன் உரையாடினேன். அது என் கண்முன்னே எனக்கான நன்நிலத்தை உருவாக்கித் தந்துள்ளது. தற்போது ஒரு சிறிய அளவிலான மரக்கன்றுகளே சேகரிப்பில் இருக்கின்றன. தொடர்ந்தும் என்தேடலும் சேகரிப்பும் "நன்னிலத்தால்" வலுப்பெறும் என நம்புகிறேன்.

இயற்கையைப் பேணுவோம், மண் வளத்தினைப் பேணுவோம், இயற்கையின் ஒரு பகுதியான மனிதர்களாகிய நாங்கள் இயற்கையைப் பாதுகாப்போம், ஆரோக்கியமான வாழ்தலை நமதாக்கிக் கொள்வோம். இயற்கையை வன்முறைக்குட்படுத்தாத வாழ்தலைக் கொண்டாடு -வோம் என்ற அடிப்படையில் சமூகத்தின்பால் அக்கறை கொண்டு உருவாக்கப்பட்ட "நன்னிலம்" 19.03.2022 அன்று திறந்து வைக்கப்பட்டது.

மூலிகை, நம்நாட்டு மரங்கள், நமது சூழலுக்கு ஏதுவான தாவரங்களின், இயற்கைப் பசளைமூலம் உருவாக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் உள்ளூர் உற்பத்திகளின் பரிமாற்ற இல்லத்தினை கொண்ட நன்நிலம் 23/1, நெசவு நிலைய வீதி, மஞ்சந்தொடுவாய், எனும் விலாசத்தில் அமைந்துள்ளது.

இச்செயற்பாடுகளில் ஆர்வமுள்ள பல்கலைக்கழக மாணவிகள் சிலரும் உதவி செய்தனர்.

நன்நிலம் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்ட மண்டூரைச் சேர்ந்த பாரம்பரிய இயற்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயம் மற்றும் மூலிகைகளின் தகவல்களை அறிந்த பரமானந்தராசா என்பவரது கருத்தின்படி எமது வாசலில், வீதி ஓரங்களில் எல்லாம் இருக்கும் புல், பூண்டுகள் பல மூலிகைகளாகவும் உணவுகளாகவும் இருக்கின்றன. ஆனால் இன்று கொங்கிறீட் பாதைகள் போன்ற பெருந் தெருக்கள் அமைப்பதன் மூலம் இவை எல்லாம் அழிக்கப்பட்டு விட்டன. மற்றும் யூரியாவை பாவிப்பதற்காக பயிர்ச்செய்கையாளர்களை முதலாளிகள் அறிவுறுத்தியும் தனது தகப்பனார் அத்தகைய செயற்கைப் பசளைகளைப் பாவிக்காது அவரது பயிர்ச்செய்கையினைத் தொடர்ந்ததாகக் கூறியதுடன் முதலாளித்துவ சிந்தனையின் உட்புகுத்தலால் செயற்கைப் பசளை பாவனை எமது நிலங்களின் வளங்களைத் தெரிந்தே அழித்த வரலாறுகளையும் கூறினார்.

இவ்வாறாக நடைபெற்று முடிந்த நன்நில நிகழ்வில் நான் மிகவும் சந்தோசமடைந்தேன் பல காலமாக என்மனதில் ஒரு மூலையில் கிடந்த விடயம் இயற்கை உரங்களைக் கொண்டு நாமாகவே பயிர்களை உற்பத்தி செய்தல், எமது மரபான மூலிகைகள் மற்றும் மரங்களை மரபு மாறாது சேகரித்தலும் பாதுகாத்தலும் இயற்கையோடு வாழ்தலும் ஆகும். இன்று என் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் உந்துதலினாலும் ஆதரவினாலும்



"நன்னிலம்" என்ற பெயரில் ஒரு இயற்கைத் தாவர மூலிகைகள் வர்த்தக நிலையமே கனவின் சாட்சியாய் உருவாகி விட்டது.

நன்னிலத்தில் தாவரங்கள் தற்போதைக்கு இருப்பில் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் செயற்கைப் பசளை, கிருமிசாசினிகள் பாவிக்காது இயற்கைப் பசளையில் உற்பத்தி செய்யப்பட்ட மரக்கறிகள், பழங்கள், விதைவகைகள் என்பனவும் விற்பனைக்கு உண்டு.

**- சிந்துஜா -**

## விட்டு விடு என்னை.....

**கனலெரியும் எனது கண்கள் கண்ணீர் துடைக்க கரங்களை தேடவில்லை...**
**மை பூசும் எனது கண்கள் வேஷம் போட வேண்டிய அவசியம் இல்லை...**

**படுக்கை பசி தீர்க்கும் உணவாக மட்டுமே பார்க்கப்பட்ட நான் வேலைக்காரி என்ற அங்கீகார கிரீடம் சூடி வேதனையின் ராணி ஆகிறேன்...**

**கொடி கட்டி பறக்க வேண்டியவளை மெட்டியிட்டு கட்டிப்போட நினைக்கும் அராஜக செடிகளின் பெயர் தான் ஆண்மையாம்...**


**என்னை ஏன் மலரோடு ஒப்பிடுகிறாய் நான் அணைக்க முடியாத கனலாய் எரிகிறேன்...**
**என்னை ஏன் மௌனமாக்குகிறாய் என் ஆரவாரம் ஆயிரம் படைகளை நொருக்க கூடியது...**


**விட்டு விடு என்னை நான் கனலாய் எரிகிறேன் என் உஷ்னத்தை உன்னால் தாங்க முடியாது....**

**நவஜோதி சாரங்கி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## செய்யகூடிய பிற செயற்பாடுகள்?

உள்ளூராட்சி சபைகள், மாகாண மற்றும் பிரதேச செயலகங்கள் போன்ற அரச திணைக்களங்களில் உணவுப்பொருட்களை சேமித்து அவற்றை விநியோகிக்கும் வகையில் மனிதாபிமான உடனடி திட்டங்களை செயற்படுத்தல்.

அரச, அரச சார்பற்ற அமைப்புக்களால் தன்னார்வ அடிப்படையில் கூட்டான சமூக மட்ட சமையல்களை ஒழுங்குபடுத்தல்.

பாடசாலைகளுக்கும் வேலைகளுக்கும் செல்வோருக்காக மானிய அடிப்படையில் போக்குவரத்து வழங்குதல்.

வன்முறைக்குள்ளாக்கப்படுவோருக்கும் வீடுகளற்றவர்களுக்கும் பாதுகாப்பாக தங்குவதற்கு காப்பகங்களை ஒழுங்கமைத்தல்.

பாடசாலைகளிலும், பாலர் பாடசாலைகளிலும் மதிய உணவு அல்லது திரிபோசா போன்றவை உணவாக வழங்குவதோடு போசாக்கு தேவைகளை மாகாண, வலய கல்வி அலுவலகங்கள் உடனடியாக உறுதிப்படுத்துதல் வேண்டும்.

பொது சுகாதார முறைமைக்கூடாக மற்றும் பாடசாலைகளில் சுகாதார நப்கின்கள் வழங்கப்படல் வேண்டும். உதாரணமாக: குறித்த பகுதி குடும்ப நல உத்தியோகத்தர் (மிட்வைவ்) மூலமாக சுகாதார நப்கின்களை வழங்குதல்

மின்சார துண்டிப்பு நேரங்களில் மாணவர்களுக்கான ஜெனரேட்டர்களைக் கொண்ட கூட்டாக கல்வி கற்கும் நிலையங்களை ஒழுங்கமைத்தல்.

மீள்சுழற்சி புத்தகங்களுக்காக காகிதங்களை (பேப்பர்களை) நன்கொடையாக வழங்குமாறு கடைகள், அலுவலகங்கள், அச்சகங்கள் என்பவற்றுக்கு பரிந்துரை செய்தல்.

ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் ஆகியன வீடு இல்லாதவர்களுக்கு ஒரு இடத்தினை வழங்குவதோடு, கூட்டான சமையலுக்காக தன்னார்வ தொண்டர்களையும் ஒழுங்கமைத்தல்.

பொருளாதார நீதிக்கான பெண்ணிலைவாதக் குழுமம்



"பாவம் இந்தத் தாய் நாய், எப்படியோ இத்தனை குட்டிகளுக்கும் பால் கொடுத்துத்தான் ஆகனும். ஆனா இந்தத் தாய் நாய்க்கு ஒரு பிளேட் சோறு யார் கொடுப்பார்கள்"

அ.இலங்கேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவே மருந்து

தற்போதைய சூழலில் எமது நாட்டில் நாங்கள் வாழ்வதற்காக பல போட்டிகளை பல வழிகளிலும் மேற்கொள்ள வேண்டிய நிலைப்பாட்டில் உள்ளோம். அந்த வகையில் நாங்கள் நஞ்சுடன் வாழ்ந்து அதனுடன் போட்டியிட வேண்டிய தேவைப்பாடு அதிகரித்துள்ளது. இவ் உலகில் தற்போது நஞ்சற்ற மரபணுமாறா உணவு முறைகளை மீளவும் உருவாக்குதல் அத்தோடு அதை பாவித்து பயன் பெறல் எனும் நோக்கோடு சூரியா கலாசார குழுவினர் தங்களது நாடக செயற்பாட்டினூடாக சமூகத்துடன் இணைகின்றோம்.

நவீன உலகத்தில் கால் தடம் பதித்து நவீனமே வாழ்க்கையாக கொண்டு வாழும் நாங்கள் உணவு என்னும் பெயரில் ஏதோ ஏதோ உணவுகளை உண்டு உயிரை கையில் கொண்டு வாழ்கிறோம். தற்பொழுது பாரம்பரிய உணவு முறைகள் மரபணுமாறா உணவுகள் போன்றவற்றை மீண்டும் இவ் உலகிற்கு கொண்டு வருவதும் அதை நம் மக்களும் நாங்களும் பாவித்து பயன் பெறுவதுமே எமது முழு நோக்கமாகும்.

## இயற்கையே ஊன்றுகோல்

எமது சூழலில் எம்மை சுற்றியுள்ள பகுதியில் எமது முன்னையோர் மரபணுமாறா இயற்கை முறையில் உருவாக்கப்பட்ட இலைகள், கீரைகள், காய்கறிகள் போன்றவற்றை பயன்படுத்தி ஆரோக்கிய சூழலில் வாழ்ந்து வந்துள்ளார்கள். நாங்கள் மீண்டும் அவ் வாழ்க்கையை கொண்டு வருவதற்காக அக் காலத்தில் காணப்பட்ட தற்போதைய சமூகத்திற்கு தெரியாத அறியாத மருவி மறைந்து போகின்ற உணவுகள், சாப்பாடுகள், முறைமைகள் போன்றவற்றை மீண்டும் இவ் உலகிற்கு கொண்டு வருகின்றோம்.

உள்ளூர் உணவுகளை அறிந்து மீளவும் கொண்டுவருவதுடன் அதை பயன்படுத்தவும் தொடங்கியுள்ளோம். உணவே மருந்தான காலம் போய் மருந்தே உணவான காலத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். அதனால் நாங்கள் இயற்கை முறையிலான மரபணுமாறாத உணவுகளை உருவாக்குவதும் அதை பயன்படுத்தி ஆரோக்கியமான தன்னிறைவான சமூகத்தை உருவாக்குவதே எமது நோக்கமாகும்.

**- கல்யாணி -**

மண்ணுக்குள்ள நஞ்ச வச்சி
மரத்த நாட்டுறம் - அந்த
மரம் வளர கெமிக்கலத்தான்
நாங்க வீசுறம்
வண்ண வண்ண வண்ணாத்திகள்
செத்துக் கிடக்குது
எங்கும் வண்ண வண்ணாத்திகள்
செத்துக் கிடக்குதே

நாட்டுப் பசள போட்டு நெல்லு
விளைஞ்சு இருக்குது - அத
ஆக்கிப் போட்டு திண்டு வந்தா
ஆயுள் நீளுதே
வெளிநாட்டுக்காரன் தந்த
நஞ்ச தின்னுறம் - நம்ம
ஆயுள் முடியும் முன்னே – நம்ம
விதியும் முடியுதே

ஏர் எடுத்து வாறன் அம்மா
உழுது போடுறம் - நல்ல
எரு எடுத்துப் போட்டு - நல்ல
விதைகள் நாட்டுறம்

மண்ணுக்குள்ள நஞ்ச வச்சி
மரத்த நாட்டுறம் - அந்த
மரம் வளர கெமிக்கலத்தான்
நாங்க வீசுறம்
வண்ண வண்ண வண்ணாத்திகள்
செத்துக் கிடக்குது
எங்கும் வண்ண வண்ணாத்திகள்
செத்துக் கிடக்குதே

**'சூரியா' கலாசார குழு**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாணி

கடந்த காலங்களில் எம்மை மாற்றிவிட்டது நாக்கிற்கு மட்டுமே எம்மை அடிமையாக்கிய கலாசாரமே நமது நாகரீக கலாசாரம் என கை நிறையப் பணமும் மெய் நிறைய நோயுமாய்த் திரிந்த மக்கள் வாழ்வில் எதிர்பாரத விதமாய் வந்த பொருளாதார நெருக்கடிச் சூழல் நிலை குலைய வைத்துவிட்டது.
இன்று 'பணப்பை'க்கும் பெறுமதியில்லை. பொருட்களும் கடையில் இல்லை. ஆகவே எமது ஊட்டசத்தை நிர்ணயிப்பதும், போசாக்கு குறையாது ஆரோக்கிய வாழ்வை தக்க வைப்பதும் கட்டாயமாகும். ஆகவே நமது காலடியின் கீழ் நாம் புதைத்த நமது நல்ல விடயங்களைத் தோண்டி எடுத்து உயிர் வாழ்தலை உறுதிப்படுத்துவது முக்கியம். அந்த வகையில் படைப்பாளி சி.ஜெயசங்கர் அவர்களினால் நெறிப்படுத்தப்பட்ட சூரியாவின் 'எழுத்தாணி' நாடகம் சூரியா கலாசாரகுழுவால் பல இடங்களில் அளிக்கை செய்யப்பட்டு வருகிறது. இந்த நாடகம் நமது பாரம்பரிய உணவின் சிறப்புக்களை எடுத்துரைக்கின்றது. அதிலிருந்து சில பகுதிகளை இங்கு தொகுத்து வழங்குகிறோம்.

**கதை சொல்லி:-** நான் யார் என்டு பாக்கிறீங்களா. நான் தான் காடுகட்டி. என்ன அம்மாச்சி முண்டம் என்டு சொல்லுவாங்க.
நாங்க உள்ளூர் உணவுகளை அறிந்து மீள கொண்டு வருவதும் அதை பயன்படுத்தவும் வந்துள்ளோம். உணவே மருந்தான காலம் போய் தற்போது மருந்தே உணவாகும் கால கட்டத்தில் நாம் உள்ளோம். அதனால் மரபுரீதியான இயற்கை முறையில் உருவாக்கப்பட்ட உணவுகளை உருவாக்கி ஆரோக்கியமான மகிழ்ச்சியான சமூகத்தை உருவாக்குவதும் தன்நிறைவானதும் ஆரோக்கியமானதுமான சமூகமாக காணப்பட வழியமைக்க போகின்றோம்.



**பாடல்:-**

கொதி நிலம் தனிக்க ஊற்றாய் வந்தாள்
நிலமெங்கும் செழிக்க வந்தாள் வந்தாள்
அகப்பை கரண்டியால் இருளை அகற்றி
நிலமெங்கும் ஒளியை தந்தாள் தந்தாள்
நிலமதன் மேனியை அலங்கரித்தாள்
பயிர் விளை பூமியை தந்தாள் தந்தாள்.

**காட்சி**

(மண்வெட்டியுடன் நிலத்தை பண்படுத்தும் தோட்டக்காரியிடம் சுரக்காய் வாங்கும் நபர் செல்லுதல்)

**நபர்:** 1 - அம்மா சுரக்கா இருக்கா ..................

**தோட்டக்காரி :-** இப்ப தான் வளவு துப்பரவாக்கிறன். (திரும்புகிறார்)

**நபர்:** 2 - சுரக்கா கிடைச்சுதா

**நபர் 1 :-** இல்ல

**நபர் 2 :-** அது சரி ஏன் சுரக்காய் தேடுறீங்க

**நபர்: 3** - வேற எதுக்கு சுண்டலுக்கு, கறிக்கு, பொரியலுக்கு, சொதிக்கு

**நபர் 1 -** ஐயோ நான் அதுக்கு தேடல்ல, சுரக்கா பொங்கல் செய்ய போறன்.

**நபர் 3 :** - ஓ··· ஓ····. நானும் மாமிட்ட போன் பண்ணி கேட்டன்

**நபர் 1:-** ஓ··· சொல்லியிருப்பாவே

**நபர்:** 2- தெரியா என்டு

**நபர் 3 :-** அவ தெரியா எண்டு சொல்லல்ல. எப்பிடி செய்யிற என்டு சொன்னாவு. சுரக்காய சின்ன சின்ன துண்டா வெட்டி அதோட அரிசி, பால், பயறு, சீனி போட்டு அடுப்பில வைச்சி கிளறி எடுத்தா சுவையான பொங்கல் தயார்.

**நபர் 1:-** ஐயோ இது இல்ல.

(தோட்டக்காரியிடம் மீண்டும் செல்கிறார்.)

**நபர் 1:** அம்மா சுரக்காய் இருக்கா

**தோட்டக்காரி :-** இப்ப தான் நாட்டியிருக்கன்

**நபர்:** 3- இன்டைக்கும் கிடைக்கல்ல போல

**நபர் 2 :-** அது சரி ஏன் புள்ள சுரக்காய்க்கு அங்க அங்க ஓடுறா. சந்திக்கு சந்தி குமிச்சி வைச்சிருக்கானுகள் வேண்ட வேண்டியதுதானே.

**நபர் 1:-** நல்லா சொன்னீங்க அது எப்படி இருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நபர்: 2-** வட்டமா இருக்கு

**நபர் 1:-** நல்லம். அங்க இருக்கிறது எல்லாம் பசளை போட்டு விளைச்சல கூட்டி நஞ்சாக்கினது. ஆனா அந்த அம்மா மரவணு மாறாம பாரம்பரிய முறையில தன்ட பிள்ளைய போல பராமரிச்சு வளர்க்கா. அது தான் அங்க அங்க போறன்.

**நபர் 2:-** எனக்கும் என்ட அம்மா ஒரு முறை சொன்னா. சுரக்காய மேலால வெட்டி அதுக்குள்ள பயறு, சீனி, பால், அரிசிய போட்டு சுரக்காய மூடி அதை ஈய பேப்பரால சுத்தி இடியப்பம் அவிக்கிற மாதிரி ஸ்றிமறில வைச்சி அவிச்சு எடுத்தா சரி

**நபர்: 1-** இந்த முறையும் இல்ல. சுரக்காய வேண்டித்து வாறன்.

**நபர் 1:-** அம்மா சுரக்காய் இருக்கா

**தோட்டக்காரி :-** இப்ப தான் பூத்திருக்கு இங்க பாரு

நபர் 1 :- ஓ.. ஓ.. மஞ்சள் பூ பூத்திருக்கு. கோலத்திற்கு வைக்க யாரும் பறிச்சித்து போயிருவாங்க.

**தோட்டக்காரி :-** நான் விடமாட்டன்

**நபர் 1 :-** சுரக்கா கிடைக்கல்ல

**நபர் 4 :-** கொஞ்சம் பொறு புள்ள. நானும் சுரக்கா பொங்கல் செய்யிற எப்பிடி என்டு ஒரு அக்காட்ட கேட்டன் அவ ஒரு சமையல்காறி. நல்லா சமைப்பா. ஆனா அவ சொன்னா அவங்கட அப்பா சொன்னாராம் இந்த மழைக்குள்ள சுரக்காய் பொங்கல் சாப்பிட்டா நல்லா இருக்கும் என்று. இப்ப அரிசி தேங்காய் விக்கிற விலைக்கு யாரு புள்ள அதில மினக்கெடுற. அரிசியும் அவியாம முட்டரிசியாய் போயித்து என்டா..? அது தான் நான் செய்ய பயப்படுறன். பரவாயில்ல··· நீ கேட்டதற்காக தான் திரும்ப அப்பாட்ட கேட்டு சொல்லுறன் என்டு சொன்னா.

**நபர் 1 :-** சரி நான் போய் சுரக்காய வேண்டித்து வாறன். அம்மா சுரக்காய்.

**தோட்டக்காரி:-** இப்ப தான் காச்சிருக்கு. இன்னும் 2,3 நாளில ஆயலாம் போயித்து வா புள்ள.

**நபர் 2:-** என்ன கிடைச்சதா

**நபர் 1:-** இல்ல

**நபர் 4 :-** புள்ளே! எனக்கும் ஒரு முறை தெரியும்.

**நபர் 1:-** என்ன முறை

**நபர் 4:-** சுரக்காய் பொங்கல் செய்யும் முறை

**நபர் 4:-** முதலில சுரக்காயின் மேல் பகுதியை மூடி மாதிரி வெட்டி எடுத்து அதனுள் உள்ளவற்றை வழித்து எடுக்க வேண்டும்

வெட்டிய சுரக்காய்க்குள் அரிசிய போட்டுத்து பொரிச்சதோ அவிச்சதோ இறைச்சி, மசாலா, தேவைப்பட்டால் மரக்கறிகளை அதனுள் போட்டு மூடியால் மூட வேண்டும். உப்பு அளவுக்கு ஏற்றால் போல் போட்டு கொள்ள வேண்டும்.

**நபர் 3 :-** என்ன புள்ள வாயப் பார்த்துத்து இருக்கா. மிச்சத்தக் கேளு···

**நபர் 4 :-** வாழை இலய எடுத்து வாட்டிப்போட்டு அதுக்கு மேல சுரக்காய வைச்சி சுத்தனும். வைக்கோல நல்லா திரிச்சி எடுத்து அதை சுத்தி சுத்தி நல்லா கட்ட வேணும். பிறகு நல்லா மண்ண சுரக்காய் மேல அப்ப வேணும்.

**நபர் 4 :-** சரி சரி மண்ண குவி புள்ள. அதுக்கு மேல சுரக்காய வைச்சி. விறகை சுற்றி வர வைத்து (விறகை மூட்டி விடுகிறார்.)

**நபர் 1 :-** இதுவும் ஒரு முறை. நான் சுரக்காய வேண்டித்து வாறன்.

**நபர் 1 :-** அம்மா சுரக்காய் இருக்கா..?

தோட்டக்காரி ஓம் புள்ள சுரக்காய் முத்தித்து எது வேணுமோ தட்டி பார்த்து ஆஞ்சித்து போ.

**பாடல்**

பாட்டி நாட்டின சுரக்கா
மரபு ரீதியான சுரக்கா
நஞ்சற்ற சுரக்கா
அழகான சுரக்கா
ஆரோக்கியமான சுரக்கா
சுரக்கா நல்ல சுரக்கா

(சுரக்காய் விளையாட்டு. நடிகர்கள் ஒருவரை ஒருவர் பிணைத்து நிலத்தில் இருப்பார்கள். தெரிவு செய்து வாங்கும் நடிகர் ஒவ்வாருவரதும் தலையை தட்டிப் பார்த்து முற்றிய சுரக்காயை தெரிவு செய்து இழுத்து எடுப்பார். இறுதியில் ஒரு சுரக்காயை தெரிவு செய்வார்.)

**நபர்: -** இந்த சுரக்காய் மரபணு மாறா பாரம்பரிய சுரக்காய். இது நமது மூதாதையோர் நமக்கு தந்தது. இதை நாம நமக்கு அடுத்த சந்ததிக்கு வழங்குறம். அவங்க அவங்க அடுத்த சந்ததிக்கு வழங்குவார்கள்.

**நபர் 1:-** முதலில சுரக்காய நன்றாக கழுவ வேண்டும். அதன்மேல் மூடி மாதிரி வெட்டி எடுத்து அதனுள்ளே இருக்கும் விதைகளை எடுத்து சுத்தம் செய்ய வேண்டும்.

(ஒருவர் கம்பு சீவிக் கொண்டு இருத்தல்)

**நபர்: 2 -** இங்க கதைய கேட்காம நீங்க என்ன வெட்டித்து இருக்கீங்க





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபர் 3 :- பொறுங்க பொறுங்க எதுக்கு என்டு உங்களுக்கு தெரிய வரும்.

நபர் 1:- சுரக்காய்க்குள்ள அரிசி, பயறு, பால்

நபர் 3 :- என்ன பால்

நபர் 1 :- பசுப்பால், தேங்காய் பால் போடலாம்

நபர் 4 :- அப்ப அங்கர் பால்

நபர்:- நல்லா இருக்கு. நஞ்சு வேணாம் என்று சொல்லித்து திரும்பவும் நஞ்சா. அத பாவிக்காதீங்க ஏனென்டா கள்ள களவா வேண்டி பாவிக்கிறாங்க.. லைன்ல நிண்டு வாங்குறாங்க. இப்பிடியொரு வாழ்க்கை தேவையில்லை.

நபர்:- பிறகு சீனி போடுற இல்லையா

நபர்:- சீனி போடலாம். ஆனா நாம போட போறது கருப்பட்டி தான். அது தான் எமக்கு ஆரோக்கியமா இருக்கும்.

நபர்1 :- பிறகு மூடியால மூடி சுரக்காய் தெரியாம வாழை இலையால மூடி தோண்டிய குழியில் வைத்து மூடி விடவும். ( விறகை மூடிய குழியின் மேல் போட்டு பற்றவைப்பதுபோல் பாவனை செய்தல்)

சுற்றி வர இருக்கும் நடிகர்கள் - ஆ..பத்துது.. பத்துது…

நபர்:- புள்ள இந்தா புள்ள, நீங்க செய்யிற மாதிரி முறைய நானும் செய்து வைச்சிருக்கன். அதை எடுத்து இப்ப இங்க வந்திருக்கிறவங்களுக்கும் குடுத்து நீங்களும் சாப்பிடுங்க.

**எழுத்தாணிக் கீரை**

நபர் 1:- நான் யார் என்டு தெரியுமா? நான் யார் எண்டு பாக்கிறீங்களா?

நபர் 2:- அக்கோ, அரசல் புரசலா கதைக்காம விசியத்த கதையுங்க.

நபர் 1:- நான் கடற்கரை ஓரத்தில இராவணன் மீசைக்கு அடியில் அடம்பன் கொடியோட செழிப்பா கிடந்தனான். ஆனா இப்ப சிரமதானம் என்ட பெயரில கடற்கரையை துப்பரவு செய்யிறதும் கரவலை இழுக்கிறதும் என்டு சொல்லி டக்டரில கட்டி இழுக்கிறதாலையும் நான் இப்ப மருவி போயித்தன். நான் யார் தெரியுமா? நான் யார் தெரியுமா?

நபர் 1:- காய்க்கும் பூக்கும் கலகலக்கும் காக்கா நிக்க கொப்பில்ல. அது எது?

நபர் 4:- நெல்

நபர் 1:- இல்ல

நபர் 2 :- திராய்

நபர்:- l அது போலதான் நான். ஆனா நான், எழுத்தாணி.

நபர் 4:- ஓ . . ஓ . . எனக்குத் தெரியும். அந்த திருவள்ளுவர் கையில வைச்சிருப்பாரே அது தானே.

நபர் 2:- அது இல்ல இது.

நபர் 1:- என்ன எடுத்து முதலில நன்றாக தண்ணியில கழுவி நிழலில காய வைக்க வேணும். பிறகு, பச்ச கொச்சிக்காய் வெங்காயத்த அவிச்சி அதில மாங்காய், மட்டியோட என்னையும் சேத்து கடஞ்சி அதுக்குப் பிறகு கொஞ்சம் கட்டிப் பால விட்டு கடஞ்சி எடுத்து சாப்பிட்டு பாருங்களன், அப்பிடி இருக்கும்!

**பொன்னாவரை**

நபர் 1:- எல்லாரும் என்னய கொஞ்சம் பாருங்களன்.

நபர் 1:- என்னைய யார் என்டு தெரியுமா?

நபர் 3:- தமிழ் அக்கா

நபர் 1:- நான் இப்ப நானா வரல்ல. வேற ஒன்டா வந்திருக்கன்.

நபர் 1:- நான் ஒரு செடி

நபர் 1:- எனக்கு மஞ்சள் நிற பூ இருக்கு.

நபர் 2:- சூரியகாந்தி?

நபர் 3 :- பொன்னாச்சி?

நபர் 4:- லிங்கப்பூ?

நபர் 1:- என்ட பூவ முட்டைக்குள்ள போட்டுப் பொரிப்பாங்க

நபர் 2:- அகத்தி?

நபர் 1:- என்ட பூவில வண்டுகள் எல்லாம் தேன் குடிக்கும்.!

நபர் 2:- எல்லாப் பூவிலையும் தேன் இருக்குத்தானே அக்கா?

நபர் 1:- சரி என்ட பூவ காய வைச்சி பொடியாக்கி சுடு தண்ணிக்குள்ள போட்டு குடிப்பாங்க. சீனி வருத்தத்திற்கு எல்லாம் நல்லம். அது மட்டும் இல்லாம என்ட இலைய மஞ்சளோட சேர்த்து அரைச்சி பூசினா சொறி, சிரங்கு குணமடையும். என்ட இலைய சுண்டி சாப்பிட்டா உடல் பருமன் குறையும்.

நபர்:- ஆ.. இது தானே அது?

எல்லாரும் :- பொன்னாவரை!

நபர் 3:- தேங்காய்க்கு மேலையா, தேங்காய்க்கு கீழயா..?

நபர் 1:- தேங்காய்க்கு மேல.

**மஞ்சாடி**

நபர் 2:- நான் உங்களுக்கு ஒன்டு காட்ட போறன்!

நபர் 1:- என்ன புதினமோ அது?

நபர் 3:- அவள் புதினந்தான் காட்டப் போறாள்

நபர் 2:- இது புதினம் மட்டுமில்ல புதிரும் இருக்கு,

நபர் 4:- எங்க காட்டு,

நபர் 1:- கையில எடு பாப்பம்,

நபர் 2:- சரி சொல்லுங்க பாப்பம்

நபர் 1:- முத்து?

நபர் 3:- குண்டுமணி?

நபர் 2:- இல்ல, இது மஞ்சாடி. இதுக்கு ஆணைக் குண்டுமணி என்டு வேறொரு பெயரும் இருக்கு.

நபர் 1 :-இதுதானே நகை அளக்கப் பயன்படுத்துவது?

நபர் 3:- அடியே அக்கா, நம்மட அம்மம்மா அவட நகை மூண்டு பவுணும் மற்றது.. என்னவோ என்டும் சொன்னாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நபர் 4 :-** ரண்டு மஞ்சாடியும்.

**நபர் 2: -** நாலு நெல்லுமணிக்கு ஒரு குண்டு மணி சமனாம். இரண்டு குண்டு மணிக்கு ஒரு மஞ்சாடி சமனாம்.

**நபர்: 1-** நிப்பாட்டுங்க கொஞ்சம். நாம என்ன நகையப் பற்றியா கதைக்கப் போறம்?

**நபர் 1:-** இல்ல.. இல்ல சமையல பற்றி!

**நபர் 1:-** அப்ப இதையா சமைக்க போறம்?

**நபர் 2:-** இதை இல்ல, இதுட துளிர் இலைய,

**நபர் 4:-** இதை சமைக்கிறதால நமக்கு என்ன நன்மை?

**நபர் 2:-** இதில மருத்துவ குணங்கள் நிறைய இருக்கு. சிறு நீரகத்தோட குருதி போறது, வாதம், முடக்கு வாதம் எல்லாத்துக்கும் நல்லம்.

**நபர் 5:-** ஓ ஓ எனக்கு இப்பதான் ஞாபகம் வந்தது எங்கட ஆச்சி சொல்லியிருக்கா இதுட பட்டைய வெட்டி அவிச்சி குடிச்சா, வயிற்றோட்டம், வயித்து குத்து, தலைவலி எல்லாம் சரியா போகுமாம்.

**நபர் 1:-** அது சரி பெரியாஸ்பத்திரியில இருக்கிற டொக்டர் மார், கம்பசில மரம் செடி சார்ந்து படிக்கிறாக்கள், ஆய்வு செய்யிறாக்கள், என்ன சொல்லுறாங்களாம்?

**நபர் 3:-** எமது முன்னையோர் சில முறைகளை ஆராய்ந்து பயன்படுத்தி வந்தாங்க. காலப் போக்கில அது மறந்து விட்டது. மறைக்கப்பட்டு விட்டது. அதனால அவர்கள் இது சார்ந்து இனி ஆராயனும், அறியனும், பிறகு உறுதி செய்ய வேணும், அதுக்குப் பிறகுதான் மற்றவங்க இனி பயன்படுத்த முடியும்.

**நபர் 1:-** அது சரி இத எப்பிடி நாட்டுற?

**நபர் 2:-** முதலில விதைய நல்லா கொதிக்கிற தண்ணியில பத்து நிமிசம் ஊற வைக்க வேணும்.

**நபர் 4 :-** விதைய அவிச்சு பிரட்ட போறீங்களா இல்ல நாட்ட போறீங்களா?

**நபர் 2:-** நான் பிரட்டல்ல நாட்டதான் போறன். இதுட விதையின் தோல் சரியான கடினம். அதில ஒரு வகையான அமிலத்தன்மையும் காணப்படுகிற படியாலதான் இப்பிடி நாட்டுறம். இப்பிடி நாட்டினா ஏழு தொடக்கம் பத்து நாளில விதை முளைச்சிடும்.

**நபர் 1:-** இல்லாட்டி

**நபர் 2:-** ஒரு வருசமாகும்.

**நபர் 3:-** அப்ப இது தேங்காய்க்கு மேலயா கீழயா?

**நபர் 2:-** தேங்காய்க்கு மேல

**நபர் 1:-** அப்ப இருந்து பாக்கன் இவ இதத்தான் கேட்டுக் கொண்டு இருக்கா, இதுக்கு என்னதான் அர்த்தம்?

**நபர்:-** அதுவா... நாங்க முதலில கீரைய போட்டு அதுக்கு மேல தேங்காய்ப் பூ, போட்டா அது தேங்காய்க்கு கீழ. முதலில தேங்காய்ப்பூவ போட்டுச் சுண்டிப் போட்டு, அதன் மேல இலயப் போட்டா அது தேங்காய்க்கு மேல..

**நபர் 1:-** மெல்லிய இலைகள் குறைவாக அவிஞ்சா போதும். அதால அத, தேங்காய்க்கு மேல என்றும் நல்லா அவிய வேண்டிய கடினமான இலைகள் தேங்காய்க்கு கீழ என்றும் அர்த்தமாகும்.

**முஸ்ட (முசுத்த) இலைப் பொரியல்**

**நபர் 1:-** வாய் நம நம எண்ணுது. நறுவல் நொறுவலா சாப்பிட்டா நல்லா இருக்கும்.

**நபர் 2:-** அக்கோ! நான் போய் கடையில பப்படம் வேண்டித்து வாறன்.

**நபர் 4:-** ஐயோ நில்லுங்க பப்படம் வேண்டத் தேவல்ல.

**நபர் 5:-** அப்ப முதலே வேண்டியாச்சி போல

**நபர் 4:-** வேண்டல்ல ஆனா பப்படம் இருக்கு

**நபர் 1:-** என்னக்கா சுத்துறா என்ன இலையவா பொரிக்கப் போறம்.

**நபர் 4:-** ஆமா இலையத்தான் பொரிக்கப் போறம்.

நபர் 5:-இலையவா? இலையில சுண்டல் செய்யலாம், சொதி வைக்கலாம், சம்பல் செய்வாங்க, சட்ணி செய்வாங்க இது என்ன புதிசா இருக்கு இலைப் பொரியல்

நபர் 4:- இலைப் பொரியல் தான்

நபர் 4:- அந்த வேலிக் கொடியில எல்லாம் கிடக்குமே

நபர் 2:- கைக்கிற குறிஞ்சா இலை?

நபர் 4:- ஐயோ இல்ல நாங்க பொரிக்க போறது முஸ்ட இலை!

நபர் 5:- முஸ்ட இலையா..?

நபர் 4:- ஆமா முஸ்ட இலை தான்.

நபர் 4:- முதலில முஸ்ட இலய தண்ணில கழுவி உப்பு தண்ணில ஊற வைச்சி பிறகு அடுப்ப பத்த வைக்க வேணும்.

நபர் 2:- அடுப்ப பத்த வைச்சி, சட்டிய வைச்சி, எண்ணைய ஊத்தி,

நபர் 4:- சரி, அப்படித்தான் எண்ணைய் கொதிக்க வேணும். பொறு, முஸ்ட இலைய எடுத்து வாறன்.

நபர் 1:- எடுத்து

நபர் 2:- கொதிக்கிற எண்ணையில

நபர் 3:- கொதிக்கிற எண்ணையில

நபர் 4:- கொள கொள கொள

நபர் 1:- சொய்ய்ய்.

நபர் 4:- இதவிட, இன்னும் கொஞ்சம் சுவையாக வேணுமென்றால், கடலை மாவில உப்பு தண்ணி சேர்த்து கரைச்சி, முஸ்ட இலைய அதனுள் தோய்த்து, கொதிக்கிற எண்ணையில போட வேணும்

அனைவரும் : சொய்ய்ய்.


நபர் 1:-இது மட்டுமா பொரிக்கலாம்?

நபர் 5:- இல்ல கார இலையும் பொரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழைக்குக் குடை தடை



இன்று வழக்கு நாள். காலை 10.00 மணி தாண்டி விட்டது. மணிக்கூட்டு கோபுர மணி ஓசை கூறுகிறது. பயணம் முடிய அவசர அவசரமாக ஓடுகிறாள் நீதிமன்றத்திற்கு. கொழுத்தும் வெயில். நேற்று முழுவதும் சரியான தலையிடி. அண்மையில் பெய்து கொண்டிருக்கும் மழையால் வந்த வினை என நினைத்துக் கொள்கிறாள். மீண்டும் கொரோனாவாம். எதற்கும் மாஸ்க்கையும் போட்டுக் கொண்டுள்ளாள். தற்பாதுகாப்புத்தான். ஏற்கனவே மூன்று ஊசி போட்டாகி விட்டது. நாலாவதாக ஊசியும் போட வேண்டுமாம். உலக சுகாதார தாபனமோ இலங்கைச் செய்தியோ சொன்னதாக ஞாபகம். எடுத்த ஊசிகள் மிஞ்சித்தோ இல்லாட்டி காலவதியாகும் திகதி நெருங்கித்தோ தெரியல்ல..உண்மையில் கொரோணா என்றா என்ன··· சிலதுக்கு ரிஷி மூலம் நதி மூலம் பாக்கக் கூடாதாம்·····கொரோணாவும் அப்படித்தான்····"வரும் கேள்விகளை முழுங்கித்து கையொக் கொண்டா என்றா கைய நீட்டனும், வாய மூடு என்றா மாஸ்க்க போடனும்···"

நீதிமன்ற வாசலுக்கு வந்தாகி விட்டது··· வாசல் கேற்றைத் தாண்டி உள்ளே போனால் பொலிஸ் தடுப்பு, வழமையாக குடையை மடக்கி வைக்கும் பொலிஸ் தடுப்பின் ஓரத்திற்கு செல்கிறாள்··· "இந்த வாசல் இல்ல மற்ற முன் வாசலால கோட்சுக்குள்ள போங்க" பொலிஸ் மறிக்கிறான் . வெயில் ஒரு பக்கம், காலையில் சாப்பிடாதது வேறு களைப்பாய் இருக்கிறது..காலும் வலிக்கிறது "திரும்ப சுத்த வேணுமா" அவளது கேள்வியை அவன் காதில் வாங்கவே இல்லை. ஒரு வோட் ஏதாவது எழுதி முன்னுக்கு போடலாம்தானே" இந்தக் கேள்வியை மனதிற்குள் கேட்டுக் கொள்கிறாள்.

இப்போ திரும்ப சுத்தி முன் வாசல் கேற்றைத் தாண்டி நீதி மன்ற வளவிற்குள் வந்தாகிவிட்டது. உள்ளே பொலிஸ் தடுப்பு. அதைத் தாண்டி நடக்கையில், "இஞ்ச வாங்க" தடுப்பில் இருக்கும் பெண் பொலிஸ் கூப்பிடுகிறா.. "கையில் ஒண்டும் கொண்டு போகேலா" இது பெண் பொலிஸ். "என்ர கையில குடையைத் தவிர ஒண்டும் இல்லயே··· "குடைய வெளியில வைச்சித்து வாங்க" வெளியில வைக்க றோட்டுத்தான் இருக்கு. அப்படி எண்டா குடைய றோட்டிலயா போட்டுத்து போற...என்று மனதிற்குள் நினைத்தபடி "வெளியால தெரிஞ்சாக்கள் யாரும் இல்ல" இது அவள். "எங்களுக்கு ஓடர். ஒண்டயும் வளவுக்குள்ள கொண்டு வரக் கூடாதாம்" இது பொலிஸ்.

பேசாமல் அவ்விடத்திலேயே நிற்கிறாள். "சரி மழை பெய்தா நனைய நனையவா ஓடிவந்து நீதிமன்றத்துக்குள்ள ஏறுற..கையில இருக்கிற வேக், போன் இதுக்கு பாதுகாப்பு என்ன? தூரத்தில இருந்து வாறதுகள்..கைய வீசித்து வரலாமா.. சனங்கள் கொண்டு வாற சாமான வெளியில வைச்சா அந்த சாமானுக்கெல்லாம் உத்தரவாதம் இந்த கட்டிடமா வழங்கப் போகுது.." என்ன செய்வது இந்த கேள்விகளையும் மனதிற்குள் கேட்டு வைத்துக் கொண்டே அவ் இடத்திலேயே நிற்கிறாள்.

"குடைய தாங்க" அவ் இடத்தில் நின்ற வேறு ஒரு பொலில் அவளது குடையை வாங்கி உள் சுவர் ஓரமாக கிடையில் கிடந்த ஒரு கட்டையின் மறைவில் போடுகிறார். ஒரு குடைய கொண்டு போக இத்தனை பாடா···ம்···அனுமதி இல்ல. ஆனா பட்டப் பகலில் வழக்கு நடந்து கொண்டிருந்த கோட்சுக்குள்ளயே துப்பாக்கியோட ஒருத்தன் போய் தனக்கு எதிரானவன சுட்டு இருக்கான்···இது என்ன பாதுகாப்பு··· திரும்பி குடையை பார்க்கிறாள். ...கட்டை மறைவில் கருப்பா சின்னனாத் தெரிகிறது···இதப் பாக்கக்குள்ள எப்படி இருக்கு.. வந்த சிரிப்பை மாஸ்க் மறைக்கிறது··· நேற்று பெய்த மழையில் பாம்பு கட்டைக்குள்ள சுருண்டு படுக்காட்டி சரி.....மௌனமாக....நீதி மன்றத்திற்குள் ஏறுகிறாள்.

**- விஜயலட்சுமி -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அனிச்சம்"

"குயர்" (Queer) சமூகம் என அறியப்படும் பொதுப்பால் சமூகத்தைச் சேர்ந்த நாங்கள் "அனிச்சம்" எனும் பெயரில் குழுவாக மட்டக்களப்பில் இயங்கி வருகின்றோம்.

அனிச்சம் என்பது ஒரு புதுமையான மலராகும். இம் மலரை ஆண் பெண் என்ற பாகுபாடின்றி யாவரும் அணிந்து அழகுற முடியும். அதன் தத்துவ ஒப்பீட்டின் அடிப்படையில் பால் புதுமையராகிய நாங்கள் கிழக்கிலங்கையை மையமாகக் கொண்டு எமது வானவில் சமூக குயர் நண்பர்களோடு இணைந்து இனம், மதம், பால் என்ற எந்தவித பாகுபாடுகளுமின்றி பரஸ்பரம் அன்பு பாராட்டிய வண்ணம் ஓர் குடும்ப அமைப்பில் மலர்ந்தமையே அனிச்சம் எனும் எமது கிலக்கிழக்கிலங்கை குயர் ஒன்றியமாகும்.

நாங்கள் பொதுப்பால் பெரும்பான்மை சமூகத்தில் சிறுபான்மையான பால் விளிம்பு நிலை மக்களாகவே எங்கும் உள்ளோம். எமது உரிமைகளும் அடையாளங்களும் ஆதிக்க சமூகத்தால் ஆதரிக்கப்படாது புறக்கணிக்கப்படவே செய்யப்படுகின்றது.

எமது உரிமைகளைப் பெற, அடையாளங்களைக் காக்க, வன்முறைகள் அற்ற நன்முறைகளைக் கொண்டு வர, முற்போக்கான சிந்தனா மாற்றங்களை உருவாக்க அனிச்சம் குழுவாகிய நாங்கள் மாற்றத்தை நோக்கி செயற்படுகின்றோம்...

பொதுப் பால் சமூகத்தின் மத்தியில் குயர் அடையாள மனிதர்களாகிய நாங்கள் விளிம்புநிலையில் காணப்படுகின்றோம்.

எமது உரிமைகள், அபிலாசைகள், ஆளுமைகள் மற்றும் திறமைகள் என்பன ஆதிக்க சமூகத்தால் பெண்ணிய உரிமைகளின் சுரண்டல்கள் போலவே தாக்கத்திற்குள்ளாகி மறுக்கவும் மறைக்கவும் செய்யப்படுகின்றன.

எனவே பெண்ணிய செயற்பாட்டாளர்களோடு இணைந்து எமது உரிமைகளுக்கும் குரல் கொடுப்பதோடு, அதற்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற காரியங்களுக்கு எதிராக செயற்படுவதும் காலத்தின் தேவையாகும்.

இதனால் சமூகத்தோடு ஒன்றித்துப் போகக்கூடிய ஓர் சுமூகநிலையை கட்டியெழுப்ப முடியும்...

எதிர்கால இளந்தலைமுறைகளுக்கான தெளிவூட்டல்களாக...

எதிர்கால தலைமுறையினர் . குயர், பால், பால் நிலை மற்றும் பாலின சமத்துவம் அதன் தன்மைகள் மற்றும் கடப்பாடுகள் பற்றி அறிய வேண்டிய காலத்தின் கட்டாய தேவைப்பாட்டில் உள்ளனர்.

எனவே எதிர்கால சந்ததியினர் இவை தொடர்பான ஆழமான அறிவைப் பெறவும், குயர் மற்றும் பால் நிலையோடு தொடர்பான எதிர்மறையான சிந்தனைகளை அவர்களின் சிந்தனை ஊடுருவல்பாடுகளில் இருந்து களையவும் விளிப்பூட்டலுடனான கல்வி முறைமையை பாடத்திட்டங்கள் வாயிலாக கொண்டு வரவேண்டுமென அரசாங்கத்திற்கு எத்தி வைக்கலாம்..


பல்கலைக்கழகங்களில் பாடத்திட்ட உருவாக்க குழுக்களை அணுகி இவை தொடர்பாக கலந்துரையாடலாம்..

குயர் பிள்ளைகளை கண்காணித்து, அவர்களின் குடும்ப உறவுகளுக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் ஏற்படுத்தலாம்..

கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களில் இவர்களுக்கும் சம அந்தஸ்து முன்னுரிமை வழங்கி அவர்களின் திறமையை, ஆளுமையை மேம்படுத்தி சமூகத்தின் தலை சிறந்த முன்மாதிரியர்களாக உருவாக்கி திகழச்செய்யலாம்...

நாங்கள் பொதுப்பால் பெரும்பான்மை சமூகத்தில் சிறுபான்மையான பால் விளிம்பு நிலை மக்களாகவே எங்கும் உள்ளோம்.

A.றோஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சொற்களஞ்சியம்**

இன்று இந்த சமூகத்திற்குள் நாம் மாற்றுப் பாலினம் சார்ந்து சிந்திக்கத் தொடங்கியுள்ளதால் அது தொடர்பான சில விளக்கங்கள், சொல் விளக்கங்கள் முக்கியமாயுள்ளன. ஆகவே 2011 இல் 'மாற்றுவெளி' எனும் சஞ்சிகையில் வெளிவந்த 'பாலியல் சார் சொற்களஞ்சியம்' எனும் கட்டுரையைத் தழுவி அதிலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிடுகிறோம். தற்போது இங்கு பழக்கத்தில் உள்ள சொற்கள் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

2011 இல் இச் சொற்களஞ்சியத்தை தொகுத்தவர்கள் பொன்னி அரசு, அனிருத்தன் வாசுதேவன் ஆகியோர் ஆகும். தற்போது இதனைப் பார்வையிட்டு பழக்கத்தில் உள்ள சொற்களை இணைத்து இக் கட்டுரைக்கு உதவி புரிந்த A.றோஸ் அவர்களுக்கு நன்றிகள்.

கடந்த பல வருடங்களாக "பாலின புதுமையர் அல்லது குயர்" (alternate sexuality) என்பது குறித்த விவாதங்கள் நிகழ்ந்து வருகின்றன. "பாலின புதுமையர்" என்று சொல்லும் பொழுது பல கேள்விகள் எழுகின்றன. உதாரணத்திற்கு, எதற்கு பாலினத்தில் புதுமை? "இயல்புப்" பாலியல் ஒன்றிருப்பதாகவும் அதற்கு "புதுமையாக" option-ஆக வேறொன்று இருப்பதாக அர்த்தமா? Option என்றால் தேர்வு செய்துகொள்ள முடியுமா? - போன்ற கேள்விகள் எழுகின்றன. ஆனால் பாலியல் புதுமை அல்லது குயர் என்று நாம் இப்பொழுது கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட, உண்மைகள் வழங்கப்பட்ட ஆண்-பெண் பாலியல் உறவுகள் அல்லாத விளிம்புநிலையான பாலியல் என்ற பொருளில் அடங்கும். பல்வேறு காரணங்களுக்காக, இது பின்வரும் பாலியல் மற்றும் பாலின அடையாளங்களாகப் புரிந்து கொள்ளப்படுகிறது: இரு ஆண்கள் (Samesexuality) அல்லது இரு பெண்களுக்கு (lesbian) இடையிலான பாலீர்ப்பு, காதல், காமம், உறவு இரு பாலினத்தவரிடமும் ஈர்ப்பும், விழைவும், காதலும், உறவும் கொள்ளக்கூடிய நிலை (bisexuality); பிறப்பாலான பாலடையாளத்தை கடக்கும் நிலை (transgender/transsexual): அதாவது பிறப்பால் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்து பின்பு பிறப்பின் பாலினத்தில் பொருத்தமின்மையை அவர்களாக உணர்ந்துகொள்ளும் போது தமக்கான பொருத்தமான பால் அடையாளத்தை ஆண் தன்மை மற்றும் பெண் தன்மை ஆகிய இயல்பினடிப்படையில் தாமாக வெளிகாட்டி ஏற்போர் (திருநர்கள்) எனப்படுவர்.

பொதுவாக சமூக அங்கீகாரம் பெறாத பாலியல் நிலைகள் என்பதாலும், இப்பொழுது தான் இவை குறித்த புரிதல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன என்பதாலும் இவற்றைப் பற்றிய விளக்கங்கள் அவசியமாகின்றன. மேலும், இந்தப் பாலியல் மற்றும் பால்நிலை வெளிப்பாடுகள் மற்றும் அடையாளங்களை இலக்காக்கும் அவதூறுச் சொற்கள் அல்லது வெறுப்புப் பேச்சுக்களை நம் சமூகத்தில் வழங்குவதால், இவை குறித்த ஆழ்ந்த புரிதல் ஏற்படுவதற்கு முன் சரியான பெயர்களையும் சொற்களையும் வித்தியாசங்களையும் அறிந்து கொள்வது அவசியம்.

அது தவிர, பொதுவாக பால், பாலியல், பால்நிலை, அடையாளம், வெளிப்பாடு ஆகியவை குறித்த தெளிவும் இன்றளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டு வரும் விளக்கங்கள் மற்றும் வேறுபாடுகளை அறிந்திருத்தலும் அவசியம்.

**பாலியல் சொற்களஞ்சியம்**

இருபாலீர்ப்பு கொண்டவர்கள்: ஆண் பெண் என்ற இரு பாலினத்தவரிடமும்

**திருநர்** சமூகத்திற்கு எதிரான அவதூறுச் சொல்லாய் இது அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. முன் காலங்களில், சுய விருப்பமின்றி பலவந்தமாகவும் தண்டனையாகவும் ஆணுறுப்பு நீக்கப்படும் ஆண்களைக் குறிக்க இச்சொல் பயன்படுத்தப் பட்டது. உதாரணம்: அரசாட்சி காலங்களில் அந்தப் புரங்களில் காவல் பணிபுரிவதற்கென பல ஆண்கள் பிறப்புறுப்பு நீக்கம் செய்யப்பட்டனர்.

**பெண்மை அல்லது பெண் தன்மை:** இது உறுதியான வரையறை இல்லாத ஒரு சொல். இது உடல் ரீதியாக பெண்ணாக இருக்கும் ஒரு நபரின் சுய வெளிப்பாட்டையும் நடந்துகொள்ளும் விதத்தையும் செயல்களையும் உடைகளையும் பேசும் விதத்தையும் குறிக்கின்றது. ஆனால் எந்த பாலினத்தவரும் தன்னை பெண்மை உடையவர்களாக அடையாளப் படுத்திக் கொள்ளலாம்.

**தன்பாலீர்ப்பு அல்லது தன்பாலின ஈர்ப்பு கொண்ட ஆண்கள்**/ Gay men - ஆண்களிடமே குறிப்பிடத்தக்க பாலீர்ப்பு கொண்ட ஆண்கள். இத்தகைய ஒருவர், ஒருபாலீர்ப்பு கொண்ட ஆண்கள் சமூகத்தின் அங்கத்தினராய்த் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளலாம். அப்படி இல்லாது எந்த சமூகத்தின ரையும் சேராது தன்னுடைய தனி மனித அடையாளமாகவும் இதைக் கொண்டிருக்கலாம். ஆண்களிடம் மட்டுமே பாலீர்ப்பு கொண்டிருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுள் சிலர் பல காரணங்களுக்காகப் பெண்களுடனும் உடலுறவு கொள்பவர்களாக இருக்கலாம்.

**பால்நிலை** (Gender): தனி நபராகவோ, சமூகத்திலோ, சட்ட ரீதியாகவோ ஒருவருக்குள்ள ஆண் அல்லது பெண் ஆகிய உயிரியல் பாலின அடையாள அடிப்படையில் ஆண்மை பெண்மை போன்ற வித்தியாசங்களைக் குறிக்கும் சொற்கள்.

**திருநங்கை:** இவர்கள் உடல் ரீதியாக ஆண்களாகப் பிறப்பவர்கள். எனினும் மனரீதியாகத் தங்களைப் பெண்களாகவே உணர்பவர்கள். பின் தங்களது வாழ்வில் ஒரு சமயத்தில் அந்த ஆண் பாலடையாளத்தை நிராகரித்து பெண்ணாகவோ, அல்லது மூன்றாம் பாலினமாகவோ தங்களை அடையாளப்படுத்திக் கொள்கின்றனர். ஹிஜ்ரா என்ற சொல் வட இந்தியாவில் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் திருநங்கை என்ற பெயர் பயன்படுத்தப் படுகின்றது.

**தன்பாலீர்ப்பு மீதான காழ்ப்புணர்ச்சி** (Homophobia): தன்பாலீர்ப்பு கொண்டவர்கள் மீதான ஒருவித வெறுப்பும் பயமும். இது சமூகத்தில் ஒதுக்குதலாகவும், வன்முறையாகவும், காழ்ப்புணர்ச்சியாகவும் வெளிப்படுகிறது.

**தன்பாலீர்ப்பு கொண்டவர்** (Homosexual) - தன்னுடையதே ஆன பாலினத்தவர் மீது ஈர்ப்பு கொண்டவர்கள். இவர்கள் ஆண்களாகவோ அல்லது பெண்களாகவோ இருக்கலாம். தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்களைப் பெரும்பாலும் "கே" (Gay) என்றும் தன்பாலீர்ப்பு கொண்ட பெண்களை "லெஸ்பியன்" (lesbian) என்றும் அழைப்பதுண்டு. உண்மையான விழைவுகளைக் குறிக்காமல் இச்சொல் மருத்துவ ரீதியான விளக்கத்தை மட்டும் தர முயல்வதாக மாற்றுப் பாலியல் கொண்டவர்கள் இதனை நிராகரிப்பதும் உண்டு.

LGBT **சமூகத்தினர்**: தன்பாலீர்ப்பு கொண்ட ஆண்களும் பெண்களும், இருபாலீர்ப்பு கொண்ட ஆண்களும் பெண்களும், எதிர்பாலடையாளம் ஏற்கும் ஆண்களும் பெண்களும் (Transgender men and women) ஆகியோரது கூட்டுச் சமூகங்களைக் குறிக்கிறது. தங்களுடைய பாலீர்ப்புகளும், பாலின வெளிப்பாடுகளும் அடையாளங்களும் வேறுபட்டு இருப்பினும், இவை காரணமாக தாங்கள் அனைவரும் ஒதுக்கப்படுவதையும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்படுவதையும் இந்தச் சமூகத்தினர் ஒன்று கூடி எதிர்த்துப் போராடுகின்றனர். தங்கள் பாலியல் காரணமாக சிறுபான்மைப்படுத்தப்படும் சமூகத்தினர்.

**Queer/க்வீயர்:** ஆண் - பெண் உறவு தான் நியதி என்ற நிலைப்பாட்டைக் கேள்விக்குள்ளாக்கும் எவரும். இவர்கள் ஒரு பாலீர்ப்பு கொண்டவர்களாகவோ, இருபாலீர்ப்பு கொண்டவர்களாகவோ, பால் மாற்றம் விரும்பி ஏற்பவர்களாகவோ இருக்கலாம். இந்தச் சொல் முதலில் ஒருபாலீர்ப்பு கொண்டவர்களை வெறுத்து ஒதுக்குபவர்களால் ஒரு அவதூறுச் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் இந்த மொழிப் பயன்பாட்டை மாற்றி அவமானச் சொற்களாய்த் திரும்பப்பெறும் அரசியல் செயல்பாட்டின் காரணமாக "க்வீயர்" (Queer) என்ற இச்சொல் சுய அடையாளமாகப் பயன்படுத்தப்படுகிறது. சில சமயங்களில் எதிர் பாலீர்ப்புள்ளவர்களும் ஆண்-பெண் உறவு நியதியைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதன் அடையாளமாகத் தங்களை "க்வீயர்" என்று அடையாளப்படுத்திக்கொள்வதுண்டு.

1890-ற்கு முன்னர் "எதிர்பாலீர்ப்பு" என்ற சொல்லோ, "ஒருபாலீர்ப்பு" என்ற சொல்லோ வழக்கத்தில் இல்லை.

**பாலினம் கடப்பவர்கள்** (Transgender(ed) persons): சமூகத்தில் வழக்கமாக ஏற்றுக்கொள்ளப்படும் பாலின நியதிகளைத் தாண்டுபவர்கள். ஆண்/பெண் என்ற குறுகிய ஈரிணை அமைப்பிலிருந்து தம்மை விலக்கி வழக்கத்திற்கு மாறான பாலின வெளிப்பாட்டினைக் கொண்டவர்கள். இவர்கள் அவ்வப்பொழுதோ அல்லது எப்பொழுதும் எதிர் பாலினத்தவரின் நடை, உடை, பழக்க வழக்கங்களை ஏற்றுச் செயல்படுபவர்களாக இருக்கிறார்கள். எனினும் இவர்கள் பால் மாற்று சிகிச்சை செய்வதற்கு முந்தைய நிலையிலோ, செய்து கொண்டவர் களாகவோ, செய்துகொள்ளும் எண்ணம் இல்லாதவர் களாகவோ இருக்கலாம்.

Transsexual: இவர்களுடைய பாலின அடையாளம் முழுமையாக எதிர் பாலினத்தவருடையதாக இருக்கிறது. இவர்கள் ஆண்களாக இருந்து பெண் பாலடையாளத்திற்கு மாறுபவர்களாகவும் ஆண் பாலடையாளம் ஏற்கும் பெண்களாகவும் இருக்கலாம். இவர்கள் பால் மாற்று சிகிச்சை செய்வதற்கு முந்தைய நிலையிலோ, செய்து கொண்டவர்களாகவோ, செய்துகொள்ளும் எண்ணம் இல்லாதவர்களாகவோ இருக்கலாம்.

நன்றி

பொன்னி அரசு, அனிருத்தன் வாசுதேவன்.

மாற்றுவெளி - ஜனவரி 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடினங்களை கடத்தல் என்பது....

நான் பிறக்கும்போது ஒரு ஆண் குழந்தையாக பிறந்தேன். நான் அனைவராலும் விரும்பப்பட்டேன். ஏனோ மூவிரண்டு வயதுகள் கழிந்தன. எனது கல்வி காலமும் வந்தது. சின்ன சின்ன சிறு மழலைகளுடன் மகிழ்ந்தேன். காலங்கள் குதூகலமாய் ஆனது. குழந்தையின் குறும்புத் தனங்களுடன் வயதும் பத்தும் ஆனது. பருவ காலம் ஆரம்பமானது. என் பருவ கால ஆரம்பத்தில் என் உணர்வுகள் மாறுபட்டன. என்னுள்ளே ஒரு மாற்றம். பள்ளிக் காலத்தில் ஆரம்பித்த என் உணர்வுகளின் மாற்றம் எனக்குள் ஒரு பயத்தை உருவாக்கியது. எப்படி என் உணர்வுகளை வெளியில் சொல்வது..? என் உணர்வுகள் எனக்குள் முதன்மை பெறத் தொடங்கின…ஆம், நான் என்னுள் ஒரு பெண்மையை உணர்ந்தேன். அதனை வெளியில் சொல்லும் முன்பே என் நடவடிக்கைகளால் என் சமூகம் என்னை இனம் கண்டு கொண்டது.

என்னுடைய நடவடிக்கை பழக்கங்கள் மாறுபட்டன. நான் ஒரு ஆணாக இருந்தாலும் என்னுள் வாழும் ஆன்மா ஒரு பெண் என்பதை முதலில் நான் உணர்ந்து கொண்டேன். இதனால் பாடசாலைக் காலத்தில் நான் பெரும்பாலும் ஒதுக்கப்பட்டேன். கேலிக்கும் உள்ளானேன். தோழமைகள் என்னை ஒதுக்கியது. நான் ஆண்களுடன் இருந்தால் பொன்ஸ், அலி என்று என்னை தனியே ஒதுக்குவார்கள். பெண் பிள்ளைகளுடன் இருக்கப் போனால் அவர்களும் என்னை பயத்துடன் நோக்கி ஒதுக்குவார்கள். எனது சிறு வயதில் இவ்வாறான சூழலை என்னால் சகித்து வாழ முடியவில்லை.

எனக்கு பன்னிரண்டு வயது ஆனது. என் பாடசாலைக்கு முதன்மை ஆசிரியர் வந்தார். அவரால் மட்டுமே நான் புரிந்து கொள்ளப்பட்டேன். அதுவரை எந்த வித நிகழ்விலும் பங்கு பற்றாமல் ஒருந்த என்னை மாலை கட்டிப் போடல் போட்டியில் இணைத்தார் இதில் முதல் இடம் எனக்குக் கிடைத்தது. தொடர்ந்து நடன பாடத்தில் இணைத்து எனது திறனையும் வளர்க்க உதவினார். எனக்கு ஓர் அழகிய பெயரான நந்தினி என பெயர் வைத்து என்னை "நந்தினி" என அழைப்பார். உணர்வுகளை ஒதுக்கிய சமூகத்தால் மெது மெதுவாக செத்துக் கொண்டிருந்த எனக்கு உயிர் கிடைத்தது போல இவருடைய ஆதரவே பெரிதும் உதவியது.

சாதாரண தரத்தை அடைந்ததும் எனது நடையில், பழக்கத்தில் இருந்து அனைத்தும் என்னில் இருந்து மாறுபட்டு இருந்தன. வீட்டில் கடும் எதிர்ப்பு எனக்கு இதனால் ஏற்பட்டது. இதனால் சாதாரண தரம் சித்தி அடைந்ததும் உயர்தரம் கற்கும் வாய்ப்பும் மறுக்கப்பட்டது. வீட்டில் என்னை மேசன் வேலைக்கு போகும்படி வற்புறுத்தினார்கள். ஏனெனில் அப்போதுதான் என் உடல் இறுகி நான் ஒரு ஆணாக இருப்பேன் என்று கூறினார்கள். எவ்வாறாயினும் எனது ஆசைகளை வெளிப்படுத்தவும், பெண்கள் அணியும் ஆடை அணிகலன்களை அணிய முடியாதவளாகவும் முடக்கப்பட்டேன். யாரும் இல்லாத நேரத்தில் நான் விரும்பும் ஆடைகள் அணிந்து நகைகள் போட்டு அழகு பார்ப்பேன். இவ்வாறு **இருட்டில் வாழும் கைதிபோல் என்னால் வாழ முடியவில்லை**. என்னைப்போல் உள்ள தோழிகளைத் தேட ஆரம்பித்தேன் தேடலின் பயனாக எனக்கு அவர்கள் நட்புக் கிடைத்தது.

என்னைப்போன்ற தோழி ஒருத்தியின் உதவியுடன் கொழும்பு சென்றேன் . அங்கு இருந்த காட் ரூ காட் (heart to heart) என்ற அமைப்புடன் என் புதிய வாழ்வு ஆரம்பமானது. அவர்களது தொடர்பால் 2016ம் ஆண்டில் இருந்து என் உணர்வுகளை வாழ வைக்க எனது புதிய பயணம் ஆரம்பமானது.

அங்கு வீட்டுப் பணி, களப்பணியாளராக இருந்ததுடன் அங்கு எனது கோமோன் (hormone) மாற்று வேலைகளையும் ஆரம்பித்தேன். பெண் என்பவளை சமூகம் எவ்வாறு வரையறை செய்து வைத்துள்ளதோ அச்சமூக வரையறைக்குள் என்னிலும் மாற்றத்தை ஏற்படுத்தினால் சமூகம் என்னையும் பெண்ணாக ஏற்றுக் கொள்ளும் என்ற அடிப்படையில் என்னில் மாற்றங்களை ஏற்படுத்தினேன். தலைமுடி வளர்த்தல் ஆடைகளில் மாற்றத்தை ஏற்படுத்தல் இப்படி. இவ்வாறான மாற்றங்களுக்கூடாக என்னில் என் உணர்வுகளில் மாற்றம் ஏற்படுவதை உணர்ந்தேன். நான் பெண்ணாக வாழ ஆரம்பித்தேன்.

அங்கிருந்து எனது சொந்த ஊர் வந்தபோது நிறைய அவமானங்கள், கேலிகள் என எத்தனையோ வலிகள், வன்முறைகள் என அத்தனையையும் சந்தித்தேன்.

ஏன் எங்களை சக மனிதராக ஏற்க மறுக்கிறீர்கள்? ஏன் எங்களை மற்றவர்களிடம் இருந்து வித்தியாசமானவர்களாக சந்திக்கும் மக்களிடம் காட்டிக் கொடுக்கிறீர்கள்? எங்களை பெண்ணாக ஏற்பவர்களிடம் கூட எங்களைப்பற்றி தவறான கருத்துக்களை விதைத்து எங்களுக்கான சின்ன சந்தோசத்தையும் ஏன் கெடுக்கிறீர்கள்? உங்களால் ஏற்க முடியவில்லை என்றால் விலகி இருங்கள். அவமானம் செய்யாதீர்கள். அது ஆம்பிள அது அப்படித்தான் ..இது இப்படித்தான்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

என்று இவையெல்லாம் ஏன்..? நாங்கள் மனிதர் அது, இது ஏன்…? எங்களுக்கு அழகான பெயர் உண்டு. பெண்ணாக வாழும் எங்களை எங்களது பெயர் சொல்லி அழையுங்கள்… பட்டப் பெயர் எதற்கு..? திருநங்கை என்று! நாங்களும் பெண்கள். பெண்ணைப் பார்த்து திருநங்கை என்றால் ஏற்றுக் கொள்வாளா…? இவ்வாறு வாய்விட்டு கேட்க முடியாத ஆயிரம் கேள்விகள் எனக்குள்…

இத்தனை போராட்டங்களுக்குள்ளும் எனக்குள் காதல் மலர்ந்தது. எனதும் அவனதும் காதல் அழகாகச் சென்றது. ஒரு கட்டத்தில் எனது கதையைக் கூறியதும் என்னை வெறுத்து ஒதுக்கத் தொடங்கினான். எனக்குக் குழந்தை பிறக்காது என்று கூறிய சமூகத்தின் கதையைச் சொன்னான். அடையாளம் தெரியாதபோது பெண்ணாக தெரிந்த நான் எனது பழய நிலமை தெரிந்ததும் நான் ஆணாக அவனது பார்வையில் தெரிந்தேன். எனக்குள் மீண்டும் கேள்வி…எங்களிடம் எந்தவித மாற்றமும் இல்லை. என் உணர்வில் மாற்றம் இல்லை, நாங்கள் பெண்கள்தான். ஆனால் அவனுக்குள் உள்ள சமூகப் பார்வையில் உள்ள ஊனம் என்னை குறை கூற வேண்டும் என்பதுதான்.. குழந்தை கிடைக்காத எத்தனையோ பெண்கள் நம்மிடையே உள்ளார்கள்… அவர்கள் என்ன அலிகளா?

குழந்தைகளை தத்து எடுப்பது. வாடகைத் தாய் மூலம் குழந்தை பெறுவது..இது சமூகத்தில் எமக்கான சாதாரண நடைமுறைகளில் ஒன்று. ஏன் இவ்வாறு நாங்கள் வாழ முடியாதா? ஆனால் உங்கள் பார்வை நாங்கள் பாலியல் தொழில் செய்து வாழ்பவர்கள் என்று மட்டும்தான். எதனைச் செய்தாலும் தவறான பார்வைகள் எதற்கு..? எங்களுக்கு வருமானம் தரும் தொழில் தேவை. சரி எங்களுக்கு தொழில் தந்து பாருங்கள்… திருநங்கை, அலி என்ற பட்டங்கள் தவிர்த்து எங்களை மனிதராக பெண்ணாகப் பாருங்கள்…

எனக்கு இழைக்கப்பட்ட எனது வரலாற்று உண்மை ஒன்றையும் இங்கு கூற விரும்புகிறேன். இராணுவத்தினரின் பரிசோதனைகள் இருந்த காலம் அது. கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்து போய்க்கொண்டிருப்பேன். எனது அரச ஆவணங்களை நான் மாற்றவில்லை. பழைய பதிவு ஆவணங்களே எனது கையில் இருந்தன. ஒரு நாள் நான் இராணுவச் சோதனைச் சாவடியில் அனைவருடனும் பஸ்சில் இருந்து இறக்கப்பட்டேன். அங்கிருந்து செக் பொயின்ட் செல்கையில் இலங்கை இராணுவத்தினர் என்னை இடை மறித்து "நீ யார்? நீ ஆள் மாறாட்டம் செய்கிறாய்? பலப் பல கேள்விகளுடன் சந்தேகத்துடன் என்னை தடுத்து விட்டனர். நான் வந்த வஸ் சென்று விட்டது… என் உடலை செக் பண்ண வேண்டும் என்றார்கள். எனக்கு அவர்கள் மொழி தெரியாது. எனது நிறுவனத்தின் பொறுப்பாளருக்கு போன் எடுத்து கொடுத்தேன். இறுதியில் என்னை விட்டு ஆக வேண்டும் என்ற நிலமைக்கு வந்தார்கள். எனினும் என்னை விடும் முன் அவர்கள் எனது உடலை செக் பண்ணத் தொடங்கினார்கள்…

வேறு பஸ்சில் நான் எனது பயணத்தைத் தொடர்ந்தேன்…எனினும் எனது இழப்புக்கள் எத்தனையோ இதற்குள்.. எனது மொழி ஏற்றுக் கொள்ளப்படாது சுய கௌரவம், நேரம், பணம்… உரிமை…

காலங்கள் கடக்கின்றன.. " சமூகம் ஏற்றுக் கொள்ளும் பெண் எனும் அடையாளத்திற்குள் செல்கிறேன். எனினும் எனக்கான உரிமையும், நியாயமும் மறுக்கப்படுகின்றன.

உடைகளில் மாற்றம், முடியில் மாற்றம் சத்திர சிகிச்சை…பெண்ணாக வாழ எத்தனை வலிகள்…பிறப்பு உறுப்பு சத்திர சிகிச்சை, இதற்கான சத்திர சிகிச்சைக்கு இந்தியா செல்லல், அதற்கான செலவு இலட்சங்களுக்கு மேல், சத்திர சிகிச்சையோ உயிர் போகும் வலியான சத்திர சிகிச்சை,

இத்தனை செய்த பின்னும் எமது பிறப்பு அத்தாட்சி பத்திரத்தில் எமது பழைய பெயரும் பாலும் உள்ளது. இது ஏன்? பெண் அடையாளம் வேண்டிய எமது வலிகளும் போராட்டங்களும் கனவுகளாகின. வேலை தேடிய இடங்களில் எமது பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தால் கேலியும் கிண்டல்களும் ஓரங்கட்டப்படலுமே நடந்து வருகின்றன.

அரசு தனது ஆவணப்படுத்தலுக்காக எமது பழைய பிறப்புப்பதிவை வைத்துக்கொள்ளட்டும். தத்து எடுக்கும் குழந்தைக்கு தாய் தந்தை பெயர் எவ்வாறு இடப்படுகிறதோ அவ்வாறே எங்களது புதிய பிறப்புப்பதிவில் எங்களது புதிய பெயரும் பெண் பாலும் பதிய வேண்டும்.

அறுவை சிகிச்சை என்பது வலியுடனானது எனினும் எமது உணர்வை, நான் யார் எனும் நிலையை உறுத்திப்படுத்துகிறது. இதனால் மன அமைதி கிடைக்கிறது. இதில் வைத்தியத்துறை பெரும் பங்காற்றுகிறது. சரியான முறையில் சத்திர சிகிச்சை நடந்தால் மன அழுத்தம் குறைகிறது.

இறுதியாக் கூறுவது, எங்களுக்கும் காதல், அன்பு, அரவணைப்பு, ஆசை, பொறுமை, கோபம், சுய கௌரவம், அனைத்தும் உண்டு. சமூகத்தில் உள்ள அனைவருமே எங்களுடைய கேள்விகளுக்கு பதில் கூற வேண்டிய பொறுப்புடையவர்கள்!.

**- கௌறி -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் மாற்றுத்திறனாளிப் பெண்களின் உரிமைசார் கோரிக்கை பிரகடணம்



இலங்கையில் வாழ்ந்து வரும் மாற்றுத்திறனாளிப் பெண்கள் இரண்டாம் தர பிரஜைகளாகவே இவ்வளவு காலமும் வாழ்ந்து வந்துள்ளனர். 2019 அரசு கணக் கெடுப்பின்படி 4.7% இலங்கையில் பெண்கள் மாற்றுத்திறனாளிகள். இந்த புள்ளிவிவரம் மிகவும் குறைவான எண்ணிக்கையை காட்டுகிறது என்று பல பகுதிகளில் மாற்றுத்திறனாளி சமூகத்தினர் நம்புகின்றனர்.

இளம் வயதிலிருந்தே மாற்றுதிறனாளியாக உள்ள வர்களுள் ஏழைக் குடும்பங்களை சேர்ந்தவர்கள் இன்றைய உலகில் பரவி வரும் பல்வகை சிகிச்சைகள் மற்றும் தமது மாற்றுத்திறனுடன் நன்கு வாழத் தேவைப்படும் உத்திகள் ஆகியவற்றை பெற முடியாமல் வாழ்கின்றனர். வளரும் வயதில் கல்வி பெறுவதிலும், பிறகு தொழில்வாய்ப்பு பெறுவதிலும் பெரும் சவால்களை சந்தித்து, சமூகத்தின் முழுமை யான மனிதராக வாழ இயலாமல் உள்ளனர்.

இதில் யுத்தத்தால் மாற்றுத்திறனாளியாக ஆக்கப்பட்ட பலநூறு சாதாரண மக்களுக்கு யுத்தம் சார் காயங்கள் மற்றும் சவால்கள் இன்னும் பல மடங்கு கூடுதலாக உள்ளது. தினசரி வாழ்க்கையில் போக்குவரத்து தொடக்கம், வைத்தியசாலை, அரசு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் அணுகும் வசதி, மாற்றுத்திறனாளிகள் குறித்த புரிதல் இல்லாமை, பாவம் பார்த்தல், அவமதிப்பு, கேலி என்று பல சவால்களை அவர்கள் சந்திக்கின்றனர். இந்த சூழலில் கீழ்வரும் கோரிக்கைகள் இந்த நிலையை மாற்றி மாற்றுத்திறனாளிப் பெண்கள் இலங்கையில் சுயமரியாதையுடன் முழுமையான வாழ்வு வாழ உதவுவதுடன், இவை தேவைகளை பூர்த்தி செய்யும் நீண்ட பயணத்தின் முதல் படிகள் மட்டுமே.

கோவிட் பெருந்தொற்று மற்றும் இப்பொழுது நீடித்து வரும் பொருளாதார நெருக்கடியில் மாற்றுத் திறனாளிகள், குறிப்பாக பெண்கள் பெரிதும் பாதிக் கப்பட்டுள்ளனர். அவர்களை சார்ந்து வாழும் குழந்தைகளும் பிற குடும்பத்தாரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கீழ்வரும் கோரிக்கைகளை சட்டம், அரச சட்ட திட்டங்கள், அரசு சாரா நிறுவனங்களின் செயல் திட்டங்கள், ஊடக ஆவணங்கள் ஆகியவற்றில் உள் வாங்குவீர்கள் என்ற நம்பிக்கையில், இலங்கையின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வெவ்வேறு பகுதிகளில் வாழும் மாற்றுத்திறனாளி பெண்கள் குழுக்களான நாங்கள் இதனை உங்களிடம் சமர்பிக்கின்றோம்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை

தேசிய அடையாள அட்டையை போல மாற்றுத் திறனாளிகளுக்கான தேசியளவிளலான அடையாள அட்டை அவசியம். வெளிப்படையாக தெரியும் மாற்றுதிறனாளிகளை போலவே வெளிப்படையாக தெரியாத மாற்றுதிறனாளிகளுக்கும் உரிமைகள் வந்தடைய இந்த அடையாள அட்டை அத்தியா வசியம். வைத்தியசாலை, போக்குவரத்து, வேலை வாய்ப்புக்கான தளங்கள், அரச உதவிகள் பெறும் நிலையங்கள், வங்கிகள் போன்றவற்றில் இந்த அடையாள அட்டை பயன்படுத்தப்படும்.

## அரசாங்கத்தின் மாற்றுத்திறனாளிகள் கொடுப்பனவு

இந்நாட்டில் வாழும் ஒவ்வொரு மாற்றுதிறனாளியும் அரசாங்கத்தினால் பதியப்படுவது, கிராமமட்டத்தில் உள்ள அரச அதிகாரிகளின் பொறுப்பு. இதை செய்தால் மட்டுமே நாட்டில் வாழும் மாற்றுத்திற னாளிகளின் சரியான கணக்கெடுப்பும் அதற்கேற்ப கொடுப்பனவும் ஒதுக்கப்படலாம்.

ஒரு குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளி காணப்படின் ஒவ்வொருவருக்கும் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். இக்கொடுப் பனவை வழங்க புள்ளிவிபர முறைமையை பயன் படுத்துவது முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். இக் கொடுப்பனவைப் பெறும் ஒரு மாற்றுதிறனாளிக்கு அரசினால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள் இருந்தால் அவற்றை காரணம் காட்டி மாற்றுதிறனாளி கொடுப்பனவு நிறுத்தப்பட கூடாது.

அதே சமயம் மாற்றுத்திறனாளி கொடுப்பனவை முன்னிறுத்தி ஏனைய கொடுப்பனவு நிறுத்தப்பட கூடாது. கொடுப்பனவுகள் அனைத்தும் மாற்றுத் திறனாளிகளின் சொந்த வங்கி கணக்குகளில், இலகுவாக பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் வழங்கப்பட வேண்டும்.

சமூர்த்தி வங்கி கணக்கினூடாக வழங்குவது நிறுத்தப்பட வேண்டும். மாற்றுதிறனாளி மாதாந்த கொடுப்பனவான 5000 ரூபாய் வாழ்க்கைச் செலவிற்கு எள்ளளவும் போதுமானதாக இல்லாத சூழலில், குறைந்த பட்சம், எமது மருத்துவ செலவை கருத்தில்கொண்டு இக்கொடுப்பனவு அனைத்து மாற்றுதிறனாளிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

## சுகாதார சேவைகள்

வைத்தியசாலையில் உள்ள அனைத்து பகுதிகளும் அனைத்து வகையான மாற்றுத்திறனாளிகளுக்கும் அனுகும் படியாக அமைந்திருக்க வேண்டும். வைத்திய சிகிச்சை பெறும் அறை, மருந்து பெறும் இடங்கள், சத்திர சிகிச்சை அறை, விடுதிகள், கழிவறைகள் போன்ற அனைத்தும் அணுகுவசதியில் காணப்பட வேண்டும்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மற்றும் மருந்து பெறும் வரிசைகள் மாற்றுதிறனாளிகளுக்கு தனித்து அமைக்கப்பட வேண்டும். மாற்றுதிறனாளிகளுக்கு தேவைப்படுகின்ற உபகரணங்கள் எங்களது உடலின் ஒரு பகுதியாக காணப்படுவதால் அவை மாவட்ட மட்டத்தில் சரியான முறையிலும் குறுகிய காலத்திலும் வழங்கப்பட வேண்டும்.
வைத்தியசாலைகளில் தமிழ் மற்றும் சைகை மொழி பேசும் வைத்தியர்கள் இருப்பதுடன் மாற்றுத் திறனாளிகளுக்கு மொழிபெயர்ப்பு வசதிகள் செய்யப்பட வேண்டும்.

மருத்துவ பிரிவில் சேவை செய்யும் வைத்தியர்கள் உட்பட ஏனைய அனைத்து அலுவலகர்களுக்கும் மாற்றுதிறனாளிகளின் பொதுவான வாழ்க்கை சார்ந்த விழிப்புணர்வு அளிக்கப்பட வேண்டும்.

## போக்குவரத்து சேவைகள்

எமது நாட்டில் சரியான போக்குவரத்து இல்லாத காரணத்தால் மாற்றுதிறனாளிகள் பாரிய சவாலை எதிர் நோக்குகின்றனர். இதில் பிரதானமாக தொழில் செய்வது, வழமையான வாழ்க்கை வாழ்வது மற்றும் முக்கியமாக மருத்துவ சேவையை நாடுவதற்கு இது இடராகவுள்ளது. அரச மற்றும் தனியார் பேருந்துகளில் செல்வது மிகவும் கஷ்டமாக உள்ள காரணத்தால் முச்சக்கர வண்டிகளில் மாற்றுதிறனாளிகள் பயனிப்பதற்கான சலுகைகள் தற்காலிகமாகவாவது வழங்கப்படல் வேண்டும்.

அரச பேருந்தில் பயணம் செய்வதற்கு தேசிய அடையாள அட்டையை பயன்படுத்துவதோடு பிரயாண பயணசீட்டை இலவசமாக அனைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுதிறனாளிகளுக்கும் வழங்குதல் வேண்டும். மாற்றுத் திறனாளிகளின் போக்குவரத்தை இலகுபடுத்துவதற்கான சுற்றுநிருவம் அரச மட்டத்தில் கலந்துரையாடப்பட்டு வெளியிடப்பட வேண்டும். இலங்கை கையொப்பம் இட்டுள்ள சர்வதேச மாற்று திறனாளிகள் உரிமைசார் ஒப்பந்தத்தின்படி, பொது போக்குவரத்தானது இரண்டு நிமிடம் நிறுத்தப்பட வேண்டும் என்ற சட்ட திட்டம் உள்ளது. இதனை இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். பிற நாடுகளில் உள்ளது போல் மாற்றுத்திறனாளிகள் ஏறி இறங்க கூடிய வகையிலும் அணுக கூடிய முறையில் உள்ள பேருந்துகள் இலங்கைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

## தொழில்வாய்ப்பு

தற்போது உள்ள மாற்றுத்திறானாளிகளுக்கான 3 சதவீத தொழில் வாய்ப்பு சார் ஒதுக்கீடு அனைத்து மாற்றுதிறனாளிகளுக்கும் தேவையான அளவு இல்லாததாலும், இதில் மாற்றுத்திறனாளி ஆண்கள் அதிகம் பயன்பெறுவதாலும், மாற்றுதிறனாளி பெண்களுக்கு என்று தனியாக 3 சதவீதம் தேவைப்படுகின்றது. அவ்வாறு 3சதவீதம் ஒதுக்கப் பட்டாலும் அவர்களுக்கு வழங்கப்படுகின்ற தொழில் வாய்ப்பானது பட்டப் படிப்பு சார்ந்து வழங்கப்படாமல் திறமையை கருத்தில் கொண்டு தொழில் வழங்கப்பட வேண்டும்.

மாற்றுதிறனாளிகள் கல்வி ரீதியாக பல சவால்களை எதிர்கொள்வதால் பட்டப் படிப்புவரை வரை செல்ல முடியாமல் உள்ளதால் திறமையை முன்னிறுத்தல் அவசியம். அரசாங்க வேலை மட்டுமல்லாது தனியார் தொழில் நிறுவனங்களிலும் இந்த ஒதுக்கீடு அமுல் படுத்தப்பட வேண்டும். தொழிலையும் எங்களது பிரதான வாழ்க்கையையும் மேற்கொள்ள சாரதி அனுமதிபத்திரம் பிரதான தேவையாக உள்ளதால், மாற்றுதிறனாளிகளுக்கு கொழும்பில் மட்டும் இவை வழங்கப்படாமல் ஒவ்வொரு மாவட்டங்களிலும் வழங்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கை எமது வாழ்வின் அடிப்படை தேவைகளுக்காகவே. இது அத்தகைய தேவைகளுக்கான பூரண பட்டியல் இல்லை. எங்களுக்கு அனுதாபம் தேவையில்லை, எங்களது உரிமைகள் எங்களை வந்தடைய வழி செய்தாலே போதும். இக்கோரிக்கைகளை தொடர்ந்து முன்வைக்கவும், இவற்றை பற்றிய மேலும் விவரங்களை அளிக்கவும் நாங்கள் தயாராகவும் உள்ளோம்.

எங்கள் உரிமை போராட்டத்தில் நீங்களும் உடன் நிற்பீர்கள் என்னும் நம்பிக்கையுடன்,

வண்ணம் மாற்றுத் திறனாளி பெண்கள் அமைப்பு - மட்டக்களப்பு

உரிமைகளுக்காக நாங்கள் - கண்டி

விவித குசலத சாகித புத்கலிங்கே சங்கம் - அம்பாறை

Endorsed by
Women Organization Working on Disability Mannar
WeCan – Persons with Disability in Manthai West
Little People Association Colombo
We for Rights

15th December 2022








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கூத்தாடி கூத்தாடி நாட்டை போட்டுடைத்தாண்டி. . . .

தானினம் தானானம் - தானம்
தானினம் தானானம்
வாருங்கடி தோழியரே
நம்ம உரிமைக்கு போராட
நாளுக்கு நாளாய் தான்
சாமான் விலை கூடித்து போகிறது



பொதுமக்கள் வேதனைகள்
இன்னும் கொஞ்சம் நாளால தெரிந்திடுமே
மண்டை வலிக்குறதே தோழியரே மாற்றுத்திறனாளி நாம்
( தானினம் தானானம் )
வேளாண்மை செய்வதற்கு தோழியரே பசளை விலை அதிகம்
வன்முறை நடக்கிறது அதிகாரிமார் பார்த்ததை திருந்தனுமே
( தானினம் தானானம் )
சின்னஞ் சிறு பெண்கள் நாட்டில் என்ன பாவம் செய்தனரோ
சந்தோசமாக தோழி பெண்களால் நடக்கமுடியுதில்லை
( தானினம் தானானம் )
டீசலின் விலையாலே தோழியரே வாகனம் குறைவல்லோ
கிளினிக்கு போறதெல்லாம் நாங்கள் இடையில நிறுத்தி விட்டோம்.
( தானினம் தானானம் )
எண்ணை பருப்பு விலை அதிகம் அதனால
நானதை வாங்கவில்லை
( தானினம் தானானம் )
பால்மா விலையாலே தோழியரே பாலன் படுந்துயரம்
தோழில் தூக்கி அணைத்தும் தோழியரே பாலன் உறங்கல்ல
( தானினம் தானானம் )

சோப்பின் விலை கூட தோழியரே பணங்காய் இனி எடுப்போம்
மா விலை கூடியதால் தோழியரே கூளும் கிடையாது
கோழி முட்டை வாங்க தோழியரே ஐம்பது ரூபாய் வேண்டும்.
( தானினம் தானானம் )
மதுபாணம் விற்கிறதை தோழியரே உடனே நிறுத்த வேணும்
சட்ட விரோதங்களால் தோழியரே குடும்பத்தில் குழப்பம் உண்டு
( தானினம் தானானம் )
காகம் கறு புறுக்க தோழியரே நாட்டு நரி ஊளையிட
சாமத்தில் எழும்பினதும் தோழியரே ஆவியாய் தானும்
( தானினம் தானானம் )
காலும் உனக் கேலா தோழியரே கவனமாய் போய்வாரும்
போய் வாறோம் சபையோரே நாங்கள்
பாடிய பாட்டிலயும் சபையோரே ஆடிய கூத்திலயும் பிழையிருந்தால்
மன்னிக்கனும் சபையோரே நாங்க போய்வாரம் சபையோரே.
( தானினம் தானானம் )

வண்ணம் குழுவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதி வேகாத பாதி ரொட்டி

கண்ணா!
காலை எழுந்தவுடன்
கைகளில்
உன்னை ஏந்தி
கன்னத்தில் முத்தமிட்டு
உன் பிஞ்சுக் கால்களை
கண்ணில் ஒற்றி
மார்போடு உன்னை
அள்ளி அணைத்து
பாலூட்ட ஆசைதான்

என்ன செய்ய
அதிகாலையில் சங்கொலி
கேட்டு அவசரமாய்
தலைமயிரை அள்ளிச்
சொருகி கூடையை
தலையில் மாட்டி
உறையும் பனிக் குளிரில்
குதிரையைப் போல்
வேகமாய் பிரட்டுக்
களத்துக்கு ஓடுகையில்
பாசமெல்லாம் பரிதியைக்
கண்ட பனித்துளி
போல் மறைந்தே போகுதே.

மதியம், பிள்ளை
மடுவத்திலிருந்து உன்னை
தூக்கி வந்து
மடியில் கிடத்தி
கொஞ்சி உன்
மழலைமொழி கேட்டு
அள்ளி அணைத்து
பாலும் சோறும்
ஊட்டி பரவசப்பட
ஆசைதான்
என்ன செய்ய
பாதி வெந்த ரொட்டியை
அவசரமாய் பிய்த்து
அரைவயிறு விழுங்கி
பச்சைத் தண்ணீரை
குடித்து கத்தும்
கங்காணிக்குப் பயந்து
கடுகதிபோல் மதியவேளை
மலைக்கு மீண்டும்
ஓடுகையில் பாசம்
எல்லாம் பஞ்சாய்
பறந்து போகுதே
மாலை வேளை
மலையிறங்கி

மீண்டும் வந்து உன்னை மடியில்
கிடத்தி முத்தமிட்டு
பால் ஊட்டி
முகம் மலர்ந்திட
ஆசைதான்
என்ன செய்ய
கசிப்பு குடிக்க
அப்பா பட்ட
கடனை அடைக்கவும்
ஆச்சியின் செத்த
வீட்டுக்கு அதிகார
துரையிடம் வாங்கிய
கடனை அடைக்கவும்
அரைவயிறு சோற்றுக்காய்
மலையேறி ஓடியோடி
மாடுபோல் உழைத்தும்
சத்தான சாப்பாடுமின்றி
பால் சுரக்காமல் போனதால்
பாசம் கூட
பாலைவனம் போல்
வரண்டு போனதே
கண்ணா!
நீ வளர்ந்து
நன்றாய் படித்து
பல்கலைக்கழகம்
போய் பட்டங்கள்
பெற்று சட்டங்கள்
கற்று பரம்பரையாய்
பாவிகள் நாங்கள்
மலையக மண்ணில்
மாடாய் உழைத்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத்து ஓடாய்
தேய்ந்தும் ஏன்
என்று கேட்க
நாதியின்றி காலமெல்லாம்
கடனாளியாகவே
வாழ்ந்து சந்தோசம்
காணாமலே இந்த
மண்ணுக்கே உரமாகும்
உரமாகும் மலையக
மாந்தரின் மடமையை
மாற்றுவாயா மகனே

என்.கே. வேணி
பலாங்கொடை.



## நீல நிறக்காரர்...

சிரிக்கின்றாய் சீறுகிறாய்
சில நேரம்
ஸ்தம்பித்தே நிற்கின்றாய்
ஆடுகின்றாய் பாடுகின்றாய்
அது எல்லாம்
எம்முள்ளும் ஆக்குகின்றாய்
இன்பமாய் இருக்கின்றாய்
இனிக்கின்ற
உணர்வைத் தருகின்றாய்
எங்கிலும் இருக்கின்றாய்
எங்களில் நிலையாய் - நீ
இருக்கின்றாய்
தாய் தந்தை என்றிருந்தேன்
இல்லை
நீயும்தான் என்கின்றேன்
என்னை வளர்த்தது
இந்த இயற்கையே
அன்னையே தானே
நீல நிறக்காரர்...
பெரிய வேலைக்காரர்
வேலை கொடுக்கும்
அலைக்காரர்
நல்லதொரு தாய்க்காரர்
எங்களுக்கும் பாசக்காரர்
சிரித்தால் நல்லவர்
சீறினால் கெட்டவர்
சூரியனாலும் அழகாகிறார்
சந்திரனாலும் அழகாகிறார்
வேறொருவரா இவர்....?
இவரே எங்களது
சொந்தகாரர்,
இவரே எங்களது கடலார்

கவிதைகள்
ர.தர்மிஸா
கிழக்குப் பல்கலைக்கழகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியை,
'பெண்',
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.

வணக்கம்.

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலைய தங்கள் பிரசுரம் கிடைத்தது. மிக்க மகிழ்ச்சியும் நன்றியும். 'பெண்' சஞ்சிகை இடையறாது ஒவ்வொரு வருடமும் தொடர்ந்து வெளி வருவது அளப்பரிய சாதனைதான். காத்திரமான படைப்புக்களால் கனதி பெற்றுள்ளது பெண். சமூக மாற்றத்திற்காக பிரயத்தனம் எடுக்கும் பெண்களின் முயற்சி இது. நிச்சயம் மாற்றத்தைக் காணும், சாதித்தே தீரும். எத்தனை கோடி பிரயத்தனங்களின் பின் நாம் இப்படி எழுந்து நிற்கிறோம். நமது பிரச்சனைகளைத் வெளிப்படையாக துணிந்து சொல்லக்கிடைத்திருக்கும் இந்த வாய்ப்புக்களே வெற்றிதான்.
மேலும் இணைந்து வெற்றி பெறுவோம்.

அன்புடன்
சம்மாந்துறை மஷூறா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்றுப் போன பலூண்கள் நீங்கள்.

கரப்பான் பூச்சிக்கும்
கதறி ஓடிய காலம் ஒன்று
எனக்கிருந்தது

என் நிழலுக்கே பயந்த
கோழைத்தனத்திற்காய்
வெட்கப்படுகிறேன்.

மொக்கனுக்கும்
நாலு மரைக்கால் பல்லனுக்கும்
பூச்சாண்டிக்கும்
அச்சமூட்டி வளர்க்கப்பட்ட
என் குழந்தைப் பருவம்
உங்களுக்கு சாதகமாயித்தோ…

உங்களை உட்காத்தி வைத்து
சோறு போட்ட குற்றத்திற்கு
நீங்கள் கொடுத்த தண்டனை
எனக்கு இது ….

பணத்திற்கும் பூமிக்கும்
பேராசைப்பட்ட உங்களுக்கு
அன்னியோன்ய இல்லறம்
பெருங் கனவாகிப் போனதே
பெருந் தண்டனை

என் இறக்கைகளைப் பிடுங்கி
என் நிழலில்இளைப்பாற
நீங்கள் பட்ட பிரயத்தனம்
புரியாதென்றா நினைத்தீர்கள்..?
தண்ணீரில் தள்ளி
மூழ்கடிக்க எத்தணிக்க,
எதிர் நீச்சல் போட
கற்றுத் தந்த
பேராசைக்கார
பேராசான்கள்….- நீங்கள்
காற்றுப் போன பலூண்கள்

நசுக்கவும்
அறுக்கவும்
விரட்டவும்
கற்றுக்கொண்டேன் நானின்று.
இனி என் பெயரை
புயலென்று மாற்றுகிறேன்
கவனத்திற் கொள்க!
காற்றுப் போன பலூண்கள்
நீங்கள்.

சம்மாந்துறை மஷூறா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பை வளர்க்க — எழுவோம்
எழுவோம்
உயிர்கள் காக்க — எழுவோம்
எழுவோம்

எங்கள் வாழ்வு எங்கள் உரிமை
என்று சொல்லி எழுவோம்
எழுவோம்
மற்றவர்களை ஒடுக்காத
பண்பாடு கொண்டு எழுவோம்
எழுவோம்

இனங்கள் தாண்டி மதங்கள்
தாண்டி
மனிதம் காக்க எழுவோம்
எழுவோம்

அனைவர் மீதும் அக்கறை
கொண்ட
பண்பாட்டுக்காய் - எழுவோம்
எழுவோம்

அனைத்து உயிரையும் மதிக்கும்
புதுப் பண்பாட்டுக்காய்
எழுவோம் எழுவோம்

வன்முறை நீக்கி எழுவோம்
எழுவோம்
நீதி ஓங்க எழுவோம் எழுவோம்
சமத்துவம் பெருக எழுவோம்
எழுவோம்
உரிமைகளுக்காய் எழுவோம்
எழுவோம்

அன்பும் அறமும் பெருகும் - புதுப்
பண்பாட்டுக்காய் எழுவோம்
எழுவோம்

சமத்துவத்திற்கான
'நூறு கோடி பெண்கள் எழுச்சி' கோசம்

## முன்னிலை . . .

நான் என்னத்தச் சொல்ல
என்னவென்று சொல்ல

பொட்டி பீத்தலாம்
வாய்க்கட்டு பிலமாம் - ம்..ஷும்...

உத்தியோகம் ஒன்டெடுத்தா
உருப்படியா வாழலாம்மென்டு
உயர்வான எண்ணம் கொண்டு
ஊக்கத்தோடு புறப்பட்டேன்

பொம்பள வேலைக்குப் போனா
ஆம்பள அகப்ப பிடிக்கணுமாம்
ஆண்வேல பொண் வேல
எல்லாம் செய்யணுமாம்

என் மூத்தம்மா என்றோ சொன்னது....

இப்ப என் புருசன் புடிக்கிறது
அகப்ப மட்டுமில்ல
கேசுக்கும் பெற்றோலுக்கும்
காக்காதான்
...........................
உமியடுப்பு கரியடுப்பு
சூட்டடுப்பு கரண்டடுப்பு
கேஸ் அடுப்பு தூசடுப்பு
முன்னிலையில் நிற்கும்
விறகடுப்பு
இதில் எதுவோ நம் சிக்கனத் தெரிவு

ஜாஹிதா ஜலால்தீன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**
இல. 4/1, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு,
இலங்கை.

**Suriya Women's Development Centre**
No. 4/1, Thomas Lane,
Batticaloa,
Sri Lanka.

**வருடாந்த சந்தா - பெண்**

ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா
US$ - 8
இந்தியா
ரூபா 400.00
இலங்கை
ரூபா 200.00

**சந்தா விண்ணப்பம் 20.......**
**பெண் சஞ்சிகைக்கு சந்தா அனுப்பியுள்ளேன்**

பெயர் : ........................................................................................

விலாசம் : ........................................................................................


திகதி : ........................................................................................

இத்துடன் காசோலை / மணி ஓடர் சூரியா பெண்கள்
அபிவிருத்தி நிலையத்தின் பேரில் அனுப்பி வைக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ISSN : 1391-6122

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org